

டாக்டர், ஆர். கே. சண்முகம் செட்டியார்

தோற்றம் 17—10—1892.

மறைவு : 5—5—1953.




சிலம்பு ௨௭ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௪, சித்திரை மே, 1953 | பரல் ௯

### திரு ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்களின்

# பேரா இயற்கை

காலஞ்சென்ற திரு. செட்டியாரவர்கள் பலதுறை வல்லுநர். பன்மொழிப்புலவர். நாவன்மை வாய்ந்த நயத்தினர். 'சொலல் வல்லர், சோர்விலர், அஞ்சார், யார்க்கும் வெலற்கரியர்,' உரனுடை உளத்தர், ஊக்கமிகும் ஆக்கத்தர். ஆட்சித்திறலர், முத்தமிழ்ப் புரவலர். அதனால் அண்ணல் என்னும் பெயர் நண்ணினர். பன்முறை மேனாடுசென்று கோனாட்சி குடியாட்சி யுள்ளிட்ட அவையினர். அனைவரும் இறும்பூதாம் பெரும் வியப்புக்கொளப் பல்லுரை பகர்ந்து நல்லன நாட்டிய செல்வர்.

பேரா இயற்கை என்பது பெருமான் திருவடி எய்தி அழியா இன்பம் ஆர்தல். நம் செட்டியாரவர்கள் 5-5-'53 மாலை ஆறு மணிக்குச் சிவபெருமான் திருவடி நீழல் எய்தினர். இறையடி எய்திய அவர்தம் ஆருயிர் மாறில் இன்பம் துய்க்குமாக. மன்றவாணன் அருள்வானாக. அவன்தாள் இறைஞ்சுதும்.

அவர்தம் மிக முதிர்ந்த தாயார் அகம்வருந்த, மனைவியும், மக்களும் ஆற்றொணாத் துன்புற, திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் பரிவுற, அன்பரும் தோழரும் துன்புற ஆவிவிடுத்தனர். அவர்தம் ஆருயிர் இன்புற, வேண்டுவ செய்வதே தக்கது.

குருதிக் கொதிப்பால், நெஞ்சடைப்பால் இரண்டு திங்கள் வருந்தினர். அதனால் கோவையின்கண் உள்ள தம் வளமனையில் ஓய்வுடன் உறைவாராயினர். ஆண்டே உயிர் நீத்தனர்.

இவர் 17-10-1892-இல் பிறந்தார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் கல்வி பயின்று பட்டம் பெற்றுள்ளார். அகவை


இருபதிற்குள்ளாகவே பொதுத்தொண்டில் புகுந்து சென்னைச் சட்ட அவை உறுப்பினரானார். பின் மூவாண்டினுள் இந்திய அரசியற் சட்ட அவை உறுப்பினரானார். 1924, மேத் திங்களில் இங்கிலாந்து சென்று இந்திய அரசியற்றொடர்பான அலுவல்களை ஆற்றலொடும் புரிந்தனர். பலமுறை அங்ஙனமே சென்று பணியாற்றினர். இரண்டாண்டுக்குப்பின் ஆத்திரேலியாவுக்கு இந்திய அரசியல் வகையாளாகச் சென்றனர்.

இந்தியா உரிமை எய்துவதன்முன்னும் அரசியலில் பல பணி திறம்பட ஆற்றியுள்ளார்கள். பொருள்துறையில் ஈடும் எடுப்பும் இல்லாப் பீடுடை வல்லுநர். 1926-இல் இந்திய அரசவைக்கு இரண்டாம் முறையாக எதிர்ப்பின்றித் தேர்வுற்றார். 1931-இல் இந்திய அரசவைத் துணைத்தலைவரானார்.

1932 ஏப்பிரலில் சினேவாவில் நடைபெற்ற அனைத்துலகத் தொழில் மாநாட்டிற்கு இந்தியத் தொழிலாளர் வகையாளாகச் சென்றார். தொழில் நுணுக்கங்களை எல்லாரும்வியப்ப விளக்கினார். தொழிலுலகுக்கே பெரும்பயன் எய்துவித்தார். 1932 சூலையில் ஒட்டவாவில் நிகழ்ந்த எல்லா நாட்டுப் பொருள்நிலை மாநாட்டில் இந்திய அரசியல் வகையாளாச் சென்றனர்.

1933 மார்ச்சில் இந்திய சட்டஅவைத் தலைவரானார். 1935-இல் கொச்சி அமைச்சரானார். 1941-வரை தொடர்ந்து அத்தொண்டினை ஆற்றினர். இந்திய அரசியலாளரால் அமர்த்தப்பட்ட வெளிநாட்டு இறக்குமதிப் பொருட்கழகத்தின் தலைவரானார். 1941, 1942, 1944 பிப்பரவரியில் தொழில் நுணுக்க ஆராய்ச்சிக் குழுவின் தலைவரானார். 1933-இல் K. C. I. E பட்டம் பெற்றார். பொருளமைச்சராக இருந்த நாட்களில் பவுன் நாணயத்தில் உள்ள குழப்பங்களைப் பொருந்தும் வகையால் அகற்றினர். அவ்வகையில் இவர் தம் திறமை இணையற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக அமர்ந்து தொண்டியற்றினர். பல்வேறியக்கத்திற்குப் பயனுடைப் பணிபுரிந்தனர். மணிவிழாவும் அண்மையில் நிகழ்ந்தது. உரிமைபெற்ற இந்திய அரசியலமைப்பில் முதல் பொருளமைச்சராகப் பணிபுரிந்தனர். பெறலரும் பெருந்தவம் இயற்றி ஈன்ற அன்னையார்க்கும், மனைவி மக்கள் முதலியவருக்கும் நம் உள்ளார்ந்த பரிவுரை உரித்தாகுக. தக்க தமிழ்த் தலைமகனை இன்றியமையாத பொழுதின்கண் இழக்க நேர்ந்தது தமிழ் நாட்டின் பெருங்குறையே.



அண்ணாமலை மன்றக் கட்டிடம்.

# அண்ணாமலை மன்றம்

இசை மாண்பு

> "ஏழிசையாய் இசைபயனாய் இன்னமுதாய் என்னுடைய
> தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
> மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
> ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே."
>
> —எ. ருக - கO.

ஏழிசை: குரல், துத்தம், இளி, கைக்கிளை, விளரி, உழை தாரம்.

இசைப்பயன்: 'பன்னிய நூல் தமிழ்மாலை பாடுவித்த' பரம் பொருளாம் சிவபெருமானை வாயாரப் பாடித் திருவடி இன்பம் எய்துதல்.

திருவினர்:

இத் திருப்பெயருக்குரிய பெருந்தகைச் சான்றோர் யாவர் என்பது எல்லார்க்கும் சொல்லாமலே விளங்கும். அவர்கள் தாம் செட்டிநாட்டு மன்னர், ராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் ஆவர். அவர்கள் காலத்துக்கேற்ற பெருங்கொடை வள்ளலாராவர். மூவேந்தரும், குறுநில மன்னரும், மூவாப் புரவலர்களும் வளர்த்துத் தாவாவிழுப்புகழ் எய்திய முத்தமிழ் அன்னையைப் பாவேந்தர் போற்றக் கோவேந்தராய் நின்று வளர்த்து நிலைநாட்டிய மிகப்பெருவள்ளல் அண்ணாமலையாராவர்.

தமிழ் வளர்ப்பு:

அவர்கள் அருளால் தோன்றிப் பொருளால் முத்தமிழை வளர்த்திலரேல் தாயில் சேய்போன்று நம் தொன்மைக் கன்னித் தமிழ் இருக்கும இடந்தெரியாது ஒடுங்கிவிடும். அவர்கள் தாளாண்மையும் வேளாண்மையும் உடங்கியைந்து ஓர் உருக் கொண்டு எழுந்த பொருள்சேர் புகழ்நிலையம் "அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் அண்ணாமலை நகரும் ஆகும்" இவ்விரண்டும் உயிரும் உடலும்போன்று ஊழி ஊழி ஒண்மையோடும் ஓங்கித் திகழ்வனவாக.

முத்தமிழுள் உயிர்போன்றது இயற்றமிழ். உள்ளம்போன்றது இசைத்தமிழ். உடல்போன்றது நாடகத்தமிழ். உள்ளம் இன்றேல் உயிரும் உடலும் ஒருபயனும் எய்தா. முத்தமிழ் போன்று மூன்றும் இயைந்து முழுநிலை எய்திய மொழி உலகில் தனித்தமிழ் மொழியையன்றி வேறெதுவும் இன்று. அத்தகைய சிறப்பு வாய்ந்த நம் தமிழ்மொழிக்கு வேற்றுப்புலமன்னர்

பொய்யை மெய்யாக நடித்து மயக்கத் தோற்றும் புல்லுருவி அனைய இல்லோர் ஆற்றிய பொல்லாங்கால் இடையிடையே முறை பிறழ்ந்த நடையும், சிறையுறைந்த இசையும், கறை நிறைந்த கூத்துமாய்க் கலப்புற்று மழுங்கி விழுங்கிய திங்கள் ஒத்து விளிப்பினும் கேளாது ஒளிக்கும்நிலை உறுவதாயிற்று. அவ்வுண்மைகள் கீழ்வரும் சான்றோர் மெய்யுரைகளால் போதரும்.

தொல்லிசை :

உள்ளம்போன்று ஓங்கி உயர்ந்து யாங்கணும் பரந்து நல்லிசைபெற்ற நம் தொல்லிசை இல்லோர் சூழ்ச்சியால் பன்னாள் பாடழிந்து கேட்பாரும் கேட்பிப்பாரும் இலராய் ஆட்படும் அடிமைபோல் ஆயிற்று. பெரும்பான்மை இசை முழக்குமிடம் திருக்கோவிலும் திருமணவீடுமே ஆகும். அவ்விரண்டிடங்களிலும் இடைக்காலத்து "ஏதிலார் ஆரத்தமர் பசிப்பர்" என்பதுபோல் தமிழ்மொழிக்கும் தமிழிசைக்கும் ஈ இருக்கும் இடமும் ஈயாது பிற மொழிக்கும் பிற இசைக்கும் பேரிடம் நல்கிப் பேதுறச் செய்தனர். என் செய்வர் பெருமக்கள்? இல்லா இடத்துக் கரும்பொன்னும் செம்பொன்னாகும்.

தோன்றல் :

அறிவும், ஆற்றலும், ஆண்மையும், திருவும், உருவும், உரனும், உறவும், உணர்ச்சியும் ஒருங்கியைந்த பெருமகன் ஒருவன் தோன்றி அன்றோ தொல்லிசை நிறுவி நல்லிசைபெற வேண்டுமென்று நானிலமேலோர் பானிலாக் கண்ணியன் தாள் நிழற்கீழ்த் தவங்கிடந்தனர். அத்தவப்பயனாய்த் தோன்றிய நம் அண்ணாமலையார் மண்ணாள் மன்னரும் மருளப் பண்ணார் தமிழிசையைப் பண்டுபோல் நாட்டப் பரிவுகொண்டு உளமுமுருகினன். ஊமர்போல், உரையுணர்வு உணரா உணர்ச்சியிலார்போல் இசை மயக்கொன்றே இயைந்து என்பயன்? இதற்கோர் வழிகாண வேண்டும் என அழிவில் உளத்தன் ஆயினன். உறுதுணை உரவோன் ஒருவன் வேண்டுமென்றும் நாடினன்.

உறுதுணை :

நாடிய பொருள் கைகூடும் நல்லூழ் வாய்ந்த நம் மன்னர்க்கு மதியமை அமைச்சுப்போன்று சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் வாய்த்தனர். இருவரும் உணர்ச்சி ஒத்த பெருந்தகையார். தமிழ்த் தாய்க்கமைந்த தவப்புதல்வர். உறுதியும், உரனும், உண்மை கடைப்பிடித்தலும், வண்மையும், வளனும், மாண்பும் மிக்கவர். இருவரும் உளமொத்து வளமிகு தமிழ் இசைத்தொண்டியற்றுவாராயினர்.

**சங்கம் :**

செட்டிநாட் டரசர் மட்டில் பெரும்பொருட் கொடையால் "'தமிழிசைச் சங்கம்' அண்ணாமலை நகர், சென்னை முதலிய பேரூர் களில் நிறுவி ஏனைச் சிற்றூர்கள் பலவற்றினும் இவற்றின் கிளை யாகப் பல சங்கங்களை நிறுவிப் பொன்னாலும் பொன்னினும் மிக்க மன்னியதன்னுறு முயற்சியாலும் ஆங்காங்குச் சென்று அருந் தொண்டாற்றினர். அதன்பயனாகத் தொன்மைத் தமி ழிசை நன்மையுற ஓங்குவதாயிற்று. மாணவ மாணவியர் பலரும் பயில்வாராயினர். பயின்று தேர்வாராயினர். தேர்ந்து பொன் னும் சான்றும் போற்றுவாராயினர். போற்றிப் பாடுவாராயி னர். பாடக்கேட்டுப் பல்லோரும் மகிழ்வாராயினர். தொண் டாற்றும் பண்பாளர் இருவரையும் பலபடப் பாராட்டிப் புகழ்வா ராயினர்.

**புகழுரு :**

கேண்மைமிக்க நண்பரும் ஆண்மைமிக்க புதல்வரும் அமை யப்பெற்ற நம் செட்டிநாட்டரசர்க்கு நாடாச் சிறப்பும் பீடார் நிலையமும் தேடாமல் கிட்டியது வியப்பன்றே! பன்னூறாயிரக் கணக்காக வாரிவழங்கி முத்தமிழ் வளர்த்த வள்ளலுக்கு சென்னைக் கோநகர்க்கண் என்றும் அழியாது நின்று நிலவும் நிலையமாய்ப் பத்து நூறாயிரம் செலவில் அமைக்கப்பெற்ற அழகிய விழுமிய முழுமணி நெடுமனை அமைவதாயிற்று. அத் தகைய இசைக்கோவிலுக்குத் திருப்பெயர் அமைக்க உன்னினர். தமிழகப் பண்பாட்டின்படி, பண்பரப்பிய மண்ணாள் வேந்தரின் மிக்க நம் அண்ணாமலையார் திருப்பெயரே அமைத்தனர். இஃ தன்றோ தொன்முறை.

"அண்ணாமலையார் மன்றம்" என அரும்பெயர் அமைத்தனர். ஆழ்ந்த அருந்தவ உள்ளத்துத் திருப்பணி எல்லாம் கடைபோக நிறைவுற்றுப் பெரும்புகழ் உருவாம் மன்றமாய்ப் பிறங்கும் என்பதற்கு நம் 'அண்ணாமலையார் மன்றம்' கண்ணாரமுதக் காட்சியாம் என்க.

அண்ணா மலைமன்றம் ஆர்ந்ததமிழ்த் தொல்லிசையின்
கண்ணாப் அனைவர்க்கும் காட்சிநலம்—எண்ணாமல்
போவார்க்கும் நல்கும் புகழுருவாம் வாழ்கநலப்
பாவார்க்கும் பண்போல் பயின்று.

1953, ஏப்பிரல் 15-புதன்கிழமை மாலை செந்தமிழ் அன் னைக்குச் சிறப்புத் திருநாளாகும். அந்நாள் தமிழக வரலாற் றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்படத்தக்க நன்னாளாகும்.

என்னை? தமிழிசைக்கே தனிச்சிறப்பு வாய்ந்த தென்னாட்டுக் கலைமரபின்படி அமைக்கப்பெற்ற அனைவரும் வியப்புறத்தக்க தனைநிகர் புனையமைந்த நிலையமும், அந் நிலையத் தமிழிசைக்குப் புத்துயிரும் புதுமலர்ச்சியும் நல்கி எங்கணும் ஊக்கமும் ஆக்கமும் அளவிறப்ப உதவி, உயிர்போன்று பேணி வளர்த்துப் பெருந் தொண்டாற்றிய செட்டிநாட்டரசர் திருப்பெயர் திகழ "அண்ணுமலை மன்றம்" எனப் பெயர் நிறுவி வழங்கிய தூஉம், இப்புத்தம புதிய மன்றத்தின்கண் "தமிழிசைச் சங்கப் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவும்" ஒருங்கியைந்து கண்கொள்ளாக் கவினுறு காட்சியாய் நிகழ்ந்தமையான் என்க. இவ் விழா 15-4-1953 முதல் 19-4-53 முடியச் சிறப்புற நிகழ்ந்தது.

**நிகழ்ச்சியின் சுருக்கம் வருமாறு :**

அண்ணுமலை மன்றத்திற்கு முதலமைச்சர் இராஜாஜி அவர்கள் வநததும், இராசா சர் முத்தையச் செட்டியாரவர்கள், திரு. எம். ஏ. சிதம்பரம் செட்டியாரவர்கள், மேயர் திரு. டி. செங்கலவராயன் அவர்கள், திரு. டி எஸ். கச்சாபகேச முதலியாரவர்கள் ஆகியோர் அவரை அன்பாக வரவேற்றனர்.

திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் கடவுள் வணக்கத் திருப்பாட்டும், செட்டி நாட்டரசர்தம் புகழ்ப்பாட்டும் பாட விழாத் துவங்கப்பெற்றது.

மேயர் திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் கிளர்ச்சியும், உணர்ச்சியும் முகமலர்ச்சியும்கொண்டு எல்லாரையும் இனிமையாக வரவேற்று நிகழ்த்திய இன்னுரையின் சுருக்கம :

இந்நாள் சென்னையில் புகழ்பெற்ற நல்நாளாகும். வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய பொன்நாளாகும். செட்டிநாட்டரசர் பத்து ஆண்டுகளாகத் தமிழருக்கும் தமிழ்க்கலைக்கும் செய்யப்பட்ட தொண்டு அளவிடமுடியாது. தமிழிசைக்குப் புத்துயிர் அளித்தனர். அப்பணி ஈடேறி இன்று "அண்ணுமலை மன்ற" உருவாகத் திகழ்கின்றது. அவ் வள்ளலை நினைவுகொள்ளாதிருக்க முடியாது. அவர்தம் புதல்வர் இராசா முத்தையச் செட்டியார் அப்பணியைத் தொடர்ந்து விடாது நடத்திவருகிறார். காலஞ்சென்ற வள்ளல் பெருந்தகையார் தம் உடல் பொருள் ஆவி அனைத்தும் தமிழிசைக்கே உதவ ஒருப்பட்டு முன்னின்றனர். அவர்தம் இறுதிமுறிப் பட்டயத்தும் அவ்வாறாகவே அமைத்துள்ளனர்.

தமிழிசை வளர்ச்சிக்கு டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் செய்துள்ள செய்துவருகின்ற அரும்

பெரும் தொண்டினைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இம் மன்றத்தை உருவாக்க அவர் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்; அவர்கட்கும் நம் நன்றி உரித்தாகும். தொடக்கநாளில் தமிழிசைக்கு மிகுந்த எதிர்ப்பிருந்தது. அஃது எல்லோருக்கும் நினைவிருக்கும. இன்று அவ்வெதிர்ப்பு அறவே மறைந்து தமிழகம் எங்கணும் தமிழிசை மணம் வீசிக்கொண்டிருப்பது நன்கு தெரிகிறது. தமிழிசை நன்கு வேரூன்றிவிட்டது. அதற்கு எதிர்கால வாழ்வு நல்லமுறையில் இருக்கும் என்பதில் ஐயமில்லை என்பதே.

மன்றத்தையும் விழாவின் பேரவையையும் திறந்துவைத்து, திரு. இராஜாஜி அவர்கள பேசியதன் சுருக்கம் வருமாறு :

மிகுந்த முதுமைப்பருவம் வாய்ந்த வருத்தத்தால் எந்தக் காரியத்தையும் சரியான வகையில் செய்யமுடியவில்லை. அங்ஙனமிருந்தும் என் நண்பர்கள் விடாமல் அடுத்தடுத்துச் சில பணிகளில் என்னை அமைக்கிறார்கள். என் ஆசியைப் பெற்றுக்கொண்டு என்னை விட்டுவிடுங்கள் என்று ராஜா ஸர். முத்தையச் செட்டியாரிடம் சொன்னேன். ஆனால் அவர் கேட்கவில்லை. அவர் வலுகட்டாயமாக என்னை இங்குவரும்படி செய்தார். ஆனால் காரியம் நல்லதாக இருப்பதால அதைச் செய்வதில் எனக்கு மனநிறைவே. இயல், இசை, நாடகம் என்று தமிழைப் பிரித்துவைத்துள்ளார்கள். இது நல்லதோர் இயக்கத்திற்குத் தொடக்கவிழாவாக இருக்கிறது. அது வெற்றிபெறக் கடவுளை உங்களுடன் வணங்குகின்றேன்.

இம்மன்ற அமைப்பு வெகுஅழகாக இருக்கின்றது. இதை அமைத்துள்ளவர்கள் மிகத் திறம்பெற அமைத்துள்ளார்கள். உள்ளத்திற்கு அளவிறந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சென்னை நகரத்திற்கு அண்ணாமலைச் செட்டியாரின் பரிசாகவே இம்மன்றத்தை வைத்துக்கொள்ளுதல் வேண்டும். தமிழிசை விழா 10-ஆண்டுகளுக்கு முன்பு துவங்கியுள்ளது. ஆயினும் அதற்கு 7, 8 ஆண்டுகளுக்குமுன்பே இந்த இயக்கம் தொடஙகப்பட்டுள்ளதாகக் கூறலாம். 18-ஆண்டுச் சண்டையாக இருந்திருக்கிறது. சண்டை என்று ஏன் சொன்னேன்? சண்டையில் துவங்கித்தான் ஓர் இயக்கமாக எதுவும் மாறும்; அதற்காகத்தான் சொன்னேன்.

தாய்மொழியில் பாடினால்தான் உள்ளம் உருகும். பத்தி பெருகும். இசைவாயிலாக ஒரு பத்தன் தன் தாய்மொழியில் கடவுளிடம் பேசுகின்றான். இயக்கத்தின் அகவுண்மை இது,

தான். செட்டியாரின் அரியதொண்டுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல ஆண்டவனை வழுத்துகின்றேன்.

பேராசிரியர் சொல்லின் செல்வர், திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமை பூண்டார்கள். அவர்கள் பேசியதன் சுருக்கம்: புகழுடம்பில் வாழும் ராஜா. சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் தமிழார்வமும், தலையாய வள்ளன்மையும் இக்கலை மாளிகையாகக் காட்சி யளிக்கின்றன. அண்ணுமலைச் செட்டியாருடன் இசை வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டுக் கண்ணிணைக்காக்கும் இமைபோல் தமிழிசைச் சங்கத்தைக் காத்துவரும் பேரறிஞர் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுடைய கலைவண்ணமும இம்மாளிகையிலே காட்சி தருகின்றது.

தமிழ்நாடு இப்பொழுது புத்துயிர்பெற்று வருகின்றது. இயல், இசை, நாடகம என்னும் முத்தமிழும் பொதுமக்களின் ஆதரவைப்பெற்று முன்னேறுகின்றன. இவ்வாண்டில் சென்னை மாநகரிலே தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் இயற்றமிழ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நாடகத்தமிழாசிரியர் முதுபெரும் புலவர்—திரு. சம்பந்த முதலியார் அவர்களின், எண்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நகரில் நிகழ்ந்த நாடகத் தமிழ்விழா என்றுமில்லாததோர் இன்பக்காட்சியாய் இருந்தது. இசைத்தமிழ் விழா இன்று இம் மன்றத்தில் கோலாகலமாக நடைபெறுகின்றது. இம்மூன்று தமிழ் விழாக்களையும் தொடங்கிவைத்து ஆசி கூறிய அண்ணல் கைராசியுள்ள ராஜாஜி என்றுல் முத்தமிழின் முன்னேற்றத்திற்கு இனித் தடையும் உண்டோ?

இசைவல்ல இராவணன் தமிழ்நாட்டிலும் ஆட்சிசெய்யத் தலைப்பட்டான். பொதிய மலையைக் கைப்பற்றிக்கொண்டால் தமிழ்நாட்டை வளைத்து ஆட்சிபுரிதல் எளிது என்று எண்ணிஞன். பொதியமலைக்கு வந்து பொதியமலைவாழ் தமிழ் முனிவரோடு யாழிசைப்போட்டி நிகழ்த்தினன். போட்டியில் தமிழ் முனிவர் வென்றுர். முனிவர் பாடிய தமிழிசைப் பாடலில் ஈடுபட்ட பறவைகளும் விலங்குகளும் பரவசமாயின. அவர் ஆணைக்கு இசைந்து இராவணன் தமிழ்நாட்டுக்கு இடரிழைக்காது அகன்றனன். தமிழ்நாட்டவர் அகமிகமகிழ்ந்தனர். இச் செய்தியைத் தொல்காப்பியப் பாயிர உரையாலும், மதுரைக் காஞ்சி யுரையாலும் அறியலாம்.

இங்ஙனம் தமிழ்நாட்டைக்காத்த இசைத்தமிழ் கடல் கடந்து இலங்கை சென்று வெற்றிபெற்ற செய்தியும், அதன் பயனாகத் தமிழர் வாழும் ஒரு நாடும் நகரமும் யாழ்ப்பாணம் என்னும் பெயரோடு நிலவுவதும் அறியத்தக்கனவாகும். யாழ் கைக்கொண்டு பாட்டிசைக்கும் பண்புவாய்ந்த இசைவாணர் பாணர் எனப்படுவர். அவர்கள் பழந்தமிழ்க் குடிகளில் ஒருவர். அவர்களைப் பழந்தமிழ்ப் பெருநில மன்னரும் குறுநில மன்னரும் பெரிதும் ஆதரித்தனர்.

சங்க காலம் என்று சொல்லப்படும் பழங்கால நூல்களில் வரும் இசைப்பாடல்கள் இயற்கை நலன்களையும் இறைவன் பெருமையையும் அழகுற எடுத்து இசைக்கின்றன. பரிபாடல் என்பது பழைய இசைப்பாடல்களில் ஒன்று. பழந்தமிழ்ப் பாணர்களும் புலவர்களும் வளர்த்துவந்த தமிழிசையைச் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பத்திநெறியைப் பரப்புவதற்குப் பயன்படுத்தினார்கள். "காத லாகிக் கசிந்து கண்ணீர்மல்கி, ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது, வேத நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமச்சி வாயவே" என்னும் திருஞானசம்பந்தர் தேவாரம். ஓதுவார் என்னும் சொல் ஈசன் புகழைப் பாடுவார் என்று பொருள்படுகிறது.

வேளாண்மை செய்வார், நீர் இறைப்பார், அறுப்பார், நடுவார், களைகட்டுவார் முதலியவர்களால் வேலைக்களத்தில் அயர்வின்றி முயற்சியோடு செய்யக் கையாளப்படுவனவும் இசைப்பாட்டுக்களே. அவை ஏற்றப்பாட்டு, ஏர்க்களப்பாட்டு முதலிய பெயர்களைப்பெறும். குறிஞ்சிநிலத்திலே குறத்திப்பாட்டு, மருதநிலத்திலே பள்ளுப்பாட்டு முழங்கும். பெண்கள் பந்து அம்மனை முதல ஆடும்போது இசைப்பாட்டிசைத்தாடுவர். சுருங்கச் சொல்லின் தமிழ்நாட்டில் பாட்டில்லாத பணியே இல்லை என்பது மிகையாகாது.

இவ்வாறு பல துறைகளிலும் புகுந்து தமிழ் மக்களின் வாழ்க்கையை இன்புறுத்திய இசைத்தமிழ் இக்காலத்திலே நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கும், சமூக வாழ்க்கையைச் சீர் திருத்துவதற்கும், அரசியல் அறிவை ஊட்டுவதற்கும் பயன் படுகின்றது. இந்தவகையில் வழிகாட்டியவர், 'பாட்டுக்கு ஒரு புலவன்' என்று பாராட்டப்படுகின்ற பாரதியாரே ஆவர். இந்நாட்டில் வழங்கிய பழைய இசைப்பாட்டெல்லாம் பாரதியார் கவிதையிலே மிளிர்கின்றன.

பழமையான பண்களின் வரலாற்றை ஆராய்வதும், புத்தம் புதிய இசைப்பாடல்களை இயற்றுவதும் இத் தமிழிசைச்

சங்கத்தின் அடிப்படையான கருத்தாகும். இத்தகைய பெரும் பணியை மேற்கொண்டு இச்சங்கம் பல்லாண்டு வாழ்க, என மனமார வாழ்த்துகின்றேன். இசைநலம் இல்லாத என்னையும் இவ் வரும்பணியில் இசைவித்த செட்டிநாட்டரசர் ராஜா சர். முத்தையச் செட்டியார் அவர்களுக்கும் தமிழிசைச் சங்கத்தார்க்கும் என் பணிவார்ந்த வணக்கம் உரியதாகும்.

மாலை 4-மணியிலிருந்து 5-15-மணிவரைத் தமிழிசைக் கல்லூரி மாணவர்கள் இன்னிசை விருந்தளித்தார்கள். ராஜாஜியின் பெயரால் வழங்கப்படும் தம்பூராவைக் கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாட்டுப் போட்டியில் முதலாவதாக வெற்றிபெற்றுள்ள திரு. இராமமூர்த்தி என்பவருக்குத் தம் கையாலேயே பரிசு வழங்கும்படி கௌரவ காரியதரிசி, திரு. கச்சாபகேச முதலியாரவர்கள் ராஜாஜியைக் கேட்டுக்கொண்டார். சென்ற ஐந்தாண்டுகளாக இப்பரிசு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் அறிவித்தார். பரிசு வழங்கப்பட்டது.

**மலர் :**

தமிழிசைச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டுச் சிறப்புமலர் ஒன்றைச் சங்கத்தார் வெளியிட்டுள்ளனர். அதன்கண் தமிழிசை இயக்கத்தின் நோக்கங்கள்பற்றியும், அதன் வரலாறுபற்றியும் விளக்கப்பட்டிருக்கின்றன. திருவாளர்கள் இராமநாதன் செட்டியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், சி. பி. இராமசாமி ஐயர், டி. கே. சிதம்பரநாத முதலியார், பெரியசாமித்தூரன் போன்ற சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. பல பெரியாரின் வண்ணப்படங்களும் அழகிய முறையில் தீட்டப்பட்டுள்ளன. இதன் பதிப்பாசிரியர் திரு. அன்பு கணபதி ஆவர்.

**நன்றியுரை :**

திரு. சி. எஸ் இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் இவ் விழாவையும் மன்றத்தையும் ராஜாஜி அவர்கள் துவக்கிவைத்தது மிகப் பொருத்தமானதென்று கூறினார்கள். அனைவர்க்கும் நன்றியுரை வழங்கினார்கள்.

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி முதலியோர் இசையரங்கு தக்க துணைக்கருவிகளுடன் வழிமுறை நிகழ்ந்தது.

—ஆசிரியர்.

# நல்குரவில் பெருமிதம்

[வித்துவான், திரு. சீ. பாலசுப்பிரமணியன், குடியேற்றம்]

ஒரு திருமணத்தின்போது தமிழ்மன்னர்களைப்பற்றி இழிவாகக் கூறியதன் நிமித்தமாக வடநாட்டுக் கனக விசயரின் தலைகள் கனக்க, கல்தாங்கிக்கொண்டு தென்னாட்டிற்குக் கொணர்ந்த மாமறவீரன் சேரன் செங்குட்டுவன் வாழ்ந்த செந்தமிழ்நாடு; நீதியில் ஒரு சிறிதும் தவறாது, கண்ணகியின் காற்சிலம்பிலுள்ள மாணிக்கப்பரல்கள் நெருப்பெனத் தெரிக்கக் கண்டு "யானோ கள்வன், கெடுக என் ஆயுள்," எனக்கூறி அரியணையினின்றும் விழுந்து உயிர்துறந்தும், நீதிகாத்த பாண்டியன் வாழ்ந்த புனிதப் பொன்னாடு; கரிகாலன் காலத்தில் பொன்னியின் வளத்தால் காணி ஆயிரங்கலம் விளைந்து, விருந்து கண்டு ஒளிக்காத திருந்திய வாழ்க்கையுடைய மக்கள் வாழ்ந்த காவிரிச் சோணாடு. சேர, சோழ, பாண்டியர்கள் தொல்காப்பியப் பாயிரத்தில் கூறிய,

> "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ்கூறு நல்லுலகம்,"

என்று எல்லையை வரையறுத்திருந்தபோதிலும் தங்களுடைய பேராண்மையாலும், வாள்வலிமையாலும், தோளாற்றலாலும் இமயததில் தங்களுடைய இலாஞ்சனைகளைப் பொறித்து ஈழம், கடாரம் முதலிய கீழைத் தீவுகளை வென்று வெண்கொற்றக்குடை தண்ணளி செய்ய இனிதே வாழ்ந்தனர்.

அவர்கள் நாடு நாடாவளத்தையுடையது. வருபுனலும் - மலையும் - வல்லரணும் உடையது. உறுபசியும் - ஓவாப்பிணியும் - செறுபகையும் இல்லாதது. நாட்டு மக்கள் தள்ளாவிளையுளைத்தரும் தீரர்கள். நாட்டில் பாழ்செய்யும் உட்பகைவர்களும் கொல்குறும்பரும் இடையார். இத்தகைய நலனைப் பெற்றிருந்ததுதான் நம் தமிழ்நாடு. அத்தகைய நாட்டிலே வாழ்ந்த மன்னர்கள் இரவலர், புலவர், கூத்தர், பாணர் முதலியவர்களுக்கும் தங்களுடைய தகுதியையும், இரப்போர் தகுதியையும், கருதிக் கொடுத்து வழங்கும் தகுதியுடையவர்கள்.

இப்பேரரசர்கள் வாழ்ந்தகாலத்தில் இவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களும் பலருண்டு. அவர்கள் குறுநில மன்னர்கள் என்று அழைக்கப்பட்டு வந்தனர். அவர்களன்றிக் கடைச்சங்க காலத்தில் பெரும் வள்ளல்களும் வாழ்ந்தனர். அவர்களையே கடையெழுவள்ளல்கள் என்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் செயற்கரிய செயலைச் செய்து தங்கள் பூத

உடலழியினும் புகழுடம்பு அழியாத கீர்த்திவாய்ந்தவர்கள். அங்ஙனம் வாழ்ந்த வள்ளல்களே - பாரி, ஓரி, மலையமான், எழினி, பேகன், ஆய், நள்ளி என்போராவர்.

காலப்போக்கில் கதிரவன் அவர்களுடைய வாழ்நாளை அழித்தான். ஆனால் புகழை அழிக்க அவனால் முடியுமா? எங்ஙனம் முடியும்! இத்தகைய வள்ளல்கள் ஒருவர்பின் ஒருவர் மாய்ந்த பிற்றைஞான்று புலவர்களுக்கும், கூத்தர், பாணர்களுக்கும் மதிப்புக்கொடுத்து, பரிசில் நல்கும் மாவீரன் - தீரன் - வணங்கா ஆண்மையும், வணங்கிய சாயலும் உடையவனே குமணன். இவன் முதிரமலையைச்சார்ந்த நாட்டை யாண்டவன். இம் முதிர மலையே இப்போது பழனிமலையென வழங்கி வருகிறது.

குமணனின் ஆட்சி நலத்தாலும், தோள் ஆற்றலாலும் நாட்டில் செல்வநிலை நல்ல நிலையிலிருந்தது. அவன் செங்கோல் என்னும் கடிவாளத்தினால் மக்கள் என்னும் குதிரையை அறிவு என்னும் பாதையில் செலுத்தி நல்வாழ்வு என்னும் சொர்க்க வாயிலுக்கு எல்லோரையும் அழைத்துச் சென்றான். அவன் செல்வத்துப்பயன் ஈதல் என்பதையும், வறியோர்க் கொன்றீவதே ஈகை என்பதையும், அன்றறிவாம் என்னாது அறம் செய்க என்பதையும், செல்வம், கூத்தாட்டு அவைக்குழாத்தைப் போன்றது என்ற நிலையாமையையும் உணர்ந்தவன். ஆதலால், தன்னைநாடி வரும் புலவர்களுக்கும், கூத்தர், பாணர்களுக்கும் பரிசில் நீட்டிக்காது பொருள் கொடுத்து வந்தனன்.

இக்காலை, புலவரேறும் பெருஞ்சித்திரனார் என்பவர் நல்குரவு என்னும் கிழிந்த சட்டையைக் குமணன் என்னும் தையற்காரனிடம் எடுத்துச் சென்றால் அவன் அறிவு என்னும் ஊசியைக் கொண்டு இன்முகம், இன்சொல் என்னும் நூலினாலும் நற்குண நற்செய்கைகள், அன்பு, அறன், பண்பு, பயன் என்னும் துண்டுத் துணிகளாலும் செப்பனிட்டுத் தருவான் என்ற காரணத்தினால் எடுத்துச் சென்றார். அவ்வாறு எடுத்துச் சென்ற அந் நல்குரவு என்னும் சட்டையைப்பற்றி என்னென்ன கூறினார் என்பதைப் பற்றியும் அவன் எவ்வெவ்வாறு அச் சட்டையைச் செப்பனிட்டு அவர் மகிழும்படி சீர் செய்து அனுப்பினான் என்பதைப்பற்றியும் இனிக் காணலாம்.

ஒருகால், பெருமிதப் போர்வையை அணிந்திருக்கும் புலவர் பெருஞ்சித்தரனார் வறுமைத்தளையினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளக் கருவூலமாம் வெளிமான் என்னும் வள்ளலிடம் செல்லுகின்றார். வெளிமான் வரையாது கொடுக்கும் ஈகைக் குணமுடையவன். தன்னுளில் தன்னை நாடிவந்த இரவலர்,

கூத்தர், பாணர், விறலியர் இவர்கட்குக் கொடுத்து ஈத்துவக்கும் இன்பத்தினை அடைந்தவன். அவ்வாறு வரையாது கொடுக்கும் வள்ளலிடம் புலமையும் பெருமிதமும் மிக்கடைந்த புலவர் செல்லுகின்றார். தன்னிலையை வள்ளலிடம் எடுத்துரைத்துப் பரிசில் கேட்கின்றார். அந்தச் சமயத்தில் வெளிமானின் உடல் நலம்குன்றி அவனுடைய உயிர் உடலினின்றும் போவோமா, வேண்டாமா என்னும் கயிற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தது. உயிர் தேய்ந்துகொண்டே வருகிறது. அங்ஙனமிருப்பினும், அற்பப்புள்ளிற்காகத் தன்னையே துலாக்கோலில் ஏற்றிக்கொண்ட சோழனின் செந்தமிழ் நாட்டிலே தோன்றிய அவன், தமிழ்ப் பண்பினைக் காயவிடாது தன் தம்பியாகிய இளவெளிமானை அழைத்து "வருங்கால வள்ளலே, புலவா தகுதியறிந்து பரிசில் நல்குக," என்றுகூறி இயற்கையோடு இணைந்துவிடுகின்றான். பாட்டாளிகளின் இரத்தத்தில் நீச்சலடித்த இளவெளிமான் தன் தகுதியையும், புலவர் தகுதியையும் அறியாது சிறிய பொன்முடிப்பொன்றைத் தந்தான். புலவர்தான் பெருமிதம் உடையவர் என்று முன்பே கூறியிருக்கின்றேன் அல்லவா? மேலும் அவர் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கினுல் பெருமிதம் மனிதனுக்குப் பிறக்கிறது என்ற பழைய பண்பாட்டுப் புலவரின் பொன்எழுத்தை உணர்ந்தவாராயிற்றே. மனமில்லாது கொடுத்தபொன்னைப் பெற்றுக்கொள்வாரா? பெறுது வெளியேறுகின்றார் பெருமிதத்துடன். அப்போது தான் முதிரமலைத்தலைவன் நினைவும் அவன் தமிழிற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும், தமிழ்ப்புலவர்கட்காகவும் வாழ்கின்றான் என்பதையும் நினைத்துச் செல்லுகின்றார். சென்றவர் தன் நல்குரவுச் சட்டையின் ஒவ்வோர் பாகத்தையும் படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிதை வடிவிலே. இனி அதைப்பற்றி ஆராய்வாம்.

பெருஞ்சித்திரனாரைக் கண்ட குமணன் கைகூப்பி அகமும் முகமும் மலரப் புலவரைவரவேற்று நன்கு உபசரித்துச் சின்னாள் தன் அவையிலேயே தங்கவைக்கின்றான். ஓர்நாள் வள்ளலாம் தையற்காரன் தனியே இருக்கின்றகாலத்துப்புலவர் தன்னுடைய நல்குரவுச்சட்டையைப்பற்றி ஆரம்பிக்கின்றார். "வள்ளலே, என்னைப் பத்துமாதம் தன் அழகிய மணிவயிற்றில் வைத்துக் காப்பாற்றிய என் தாய் தற்போது வலுவிழந்து, நரை திரை மிகுந்து, தண்டூன்றி, வீட்டின் முன்புறமாகவே செல்ல முடியாது, தன் உயிர் உடலைவிட்டு எப்போது நீங்குமோ என்று ஏங்கிக் கிடக்கின்றாள். என்னுடன் மஞ்சத்திலே கொஞ்சிக் குலாவி எனக்கு இன்பமூட்டிய என் மனையாள் தன் மார்

பகத்தில் பால் இன்மையால் பல்கால் என் குறுநடைப் புதல்வன், பிள்ளைக்கனி, வாழைக்கன்று, குதலைமொழியன், சுவைத்து அதனால் வற்றிய நகிலினை உடையவள். நான் இவண் வந்து விட்டதால் உண்ணவின்றித் தன் குடும்பப் பெருமை குலையா திருக்கப் படிதாண்டாப் பத்தினியாகிய என் வாழ்க்கைத் துணைவி கையிலே மட்கலத்தோடு வெளியில்சென்று இரந்தாள் இல்லை. வேறு என்ன செய்வாள். வீட்டின் தோட்டத்திலுள்ள குப்பைக் கீரையின் நுண்ணிய தளிர்களைப் பறித்துக்கொண்டுவந்து உப்பின்றி, மோருமின்றி அதைச்சமைத்துத் தன் மாமிக்கும் மதலைகளுக்கும் அக் கீரையை உணவாகப் பரிமாறுவாள். கண்ணிலே கண்ணீரினாலும், வயிற்றிலே பசித் தீயினாலும், மார்பகத்தில் குழந்தை பால்உண்ட சூட்டினாலும் அவள் கட்டியிருந்த ஒரே புடைவை மிகவும் அழுக்கடைந்து கிடக்கும். மாற்றிக்கட்டத் துணியில்லை அவளுக்கு இவ்வாறு என் தாயின் பசியும், மனைவியின் பசியும், மதலைகளின் பசியும் சொல்லத்தகுவன வல்ல. தாயின்பசி கொடுமை வாய்ந்ததல்லவா? இச்சமயத் திலும் வள்ளுவன் வாக்குத்தான் என் சிந்தையிலும், செவி யிலும் நிறைந்தும், ஒலித்துக்கொண்டிருக்கிறது. அது:

> " ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை." (குறள்: 656)

என்பதேயாம்.

என் மனைவியின் மாண்பு எத்தகையது என்பதையும் அச் செந்நாப்போதாரே மண்ணதிர, விண்ணதிர ஒலிக்கச் செய்கின்றார் தன் ஒன்றேமுக்கால் அடியினால். அம்முழக்கத் தின் ஒலியே,

> " தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்." (குறள்: 56)

என்பது. இந்த இலக்கியத்திற்கு இலக்கணமாக விளங்குபவள் என் மனைவி."

> " அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
> சிறுகை யளாவிய கூழ்." (குறள்: 64)

என்ற புரட்சிக் கவியினை ஓர்ந்தவள். குழந்தைகள், 'பசிக்கிறதே அம்மா', என்று கண்ணீர் விடும்போதெல்லாம் "அப்பா வந்து விடுவாரடா கண்ணே, இதோ பார்," என்று மரத்தால் செய்த புலியைக் காட்டியும், வானிலே செம்பொற்குடம் போன்று காட்சியளிக்கும் மதியத்தைக் காட்டியும் அவர்கள் அழுகையை நிறுத்த முயல்வாள். பால் நினைந்து ஊட்டும் முதற்றாய்தான், என்ன செய்வது, வறுமை வதைக்கும்போது. குழந்தைகள்

அவைகளைக் கண்டு அஞ்சியும், மகிழ்ந்தும் உறங்கிவிடுவார்கள். எப்போது என் கணவர் வருவார், இந்தப் பிஞ்சு உள்ளங்கள் எத்தனை நாட்களுக்குத்தான் பட்டினி கிடக்கும் என்று என் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் கிடப்பாள்."

"வள்ளலே, எனக்குப் பொன்தட்டில் ஆகாயத்தில் உள்ள மீன் கூட்டங்களைப் போன்று வெண்மையான வெள்ளிக் கிண்ணங்கள் பலவற்றில் பலவகை அறுசுவை உணவுகளை நாடோறும் என் உடனிருந்து உண்பிக்கின்றீர்கள். நானும் அவைகளை உண்கிறேன் பல நாட்களாக. என்னைப் போகவிடல் வேண்டும் என்று பலவாறு கூறுகின்றார்." இதுவரை என் நல்குரவுச் சட்டையைப்பற்றிக் கூறியாகிவிட்டது. இனிமேல் உங்கள் வேலைதான் ஆரம்பமாகவேண்டும் என்று கூறுகின்றார்.

குமணனுக்கு, பெரும்புலவர் பலநாள் தன்னுடன் தங்கி அளவளாவுதல் வேண்டும் என்ற அவாவினால் பரிசில் நீட்டித்தான். இதையறிந்த புலவர் தன்னுடைய இல்லின் திறத்தையும், மனைத்தக்க மாண்புடையாள் - தற்கொண்டாள் - வளத்தக்காள் நிலைமையினையும், குதலைமொழி மைந்தர்களைப் பற்றியும் கூறி, வள்ளலே,

"வல்லினும் வல்லே ஞயினும் வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும." (புறம்: ௧௬௧)

என்று வருந்திக் கூறுகின்றார். ஐயனே - யான் இவண்வந்து பல நாளாயிற்று. என்னை இன்றே பரிசில் கொடுத்தனுப்புக என்றார். என்னுடைய தகுதியைப் பாராமல் உன்னுடைய தகுதியை அறிந்து என்னைப் போகும்படி செய்வாயாக என்று பெருமிதத்துடன் பின்னும் கூறுகின்றார். "வள்ளலே, தாங்கள் கொடுக்கும் பரிசிலைக் கண்டு மன்னர்கள் நாணித் தங்களுடைய அடையா நெடுங்கதவுகளையும் சார்த்தல்வேண்டும். என்னை இன்றே அனுப்புக" என்றார்.

புலவர் நிலையறிந்த புரவலர் இன்னும் இவரைத் தங்க வைத்து இவர் பொறுமையைச் சோதனை செய்தல் அறமன்று என்பதை மனத்தே உன்னி, யானை, தேர், குதிரை, அதற்குத் தகுந்த பட்டு, பஞ்சாடைகள், பொருள் முதலியன கொடுத்து அனுப்புகிறார்.

பரிசில் பெற்றுக்கொண்டு ஏகிய புலவர் தாம் முன்னாள் பெருமிதத்துடன் பரிசில் பெறாது திரும்பிய இளவெளிமானின் இடத்திற்குச் சென்று பின்வரும் கவிதையைக் கவின்பெறக் கூறுகின்றார். அதுவே,

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே." (புறம்: ௧௬௨)

என்று பெருமிதத்துடன் கூறுகிறார். இளவெளிமானைப்பார்த்துப் புலவர் கூறுகின்றார். வள்ளல் குமணன் உன்னைக்காட்டிலும் செல்வத்தில் குறைந்தவனே - ஆனால் ஈகையிலே பெரியன்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு." (குறள்: ௨௩௧)

என்ற பொய்யாமொழியின் புரட்சிக் கீதத்தைத் தன் இரும்பு மனத்தின்கண் வைத்துக்கொண்டு அதைக் கடைப்பிடிப்பவன். எனக்கு அவன் பரிசில்கள் நல்கியிருக்கின்றான், நன்றாக நோக்குக. இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பாய் நீயுமல்லை. புரப்போர், இரப்போர்க்கு இல்லையுமல்லர். இனி . இரப்போர் உண்டாதலையும் காண்பாயாக. இனி இரப்போர்க்கு ஈவோர் உண்டாதலையும் காண்பாய். நின்னுடைய காவலையுடைய மரத்தில் கொண்டு வந்து யாம் கட்டிய உயர்ந்த இயல் வாய்ந்த யானை எமது பரிசில்; பெற்றுக்கொள் என்று கூறிப் பெருமிதத்துடன் சென்றார். மனைவி, இவர்தானா என் மணாளர் என்று வியந்தவாறே வரவேற்று உபசரிக்கின்றாள் புலவரேற்றை. மனைவியை நோக்கிப் புலவர் "நன்னுதால், இதுவரையில் நாம் வறுமையில் உழன்றோம். இனிக் கவலையில்லை. யான் கொண்டுவந்த பொருளை இருவரும் சேர்ந்து யாவர்க்கும் வழங்குவோம். வல்லாங்கு வாழலாம் என்று நினையாது நீ உன் விருப்பப்பட்டவர்களுக்கு என்னைக் கேட்காமல் கொடுப்பதற்கு உனக்கு முழு உரிமை உண்டு. அவ்வாறு யாவர்க்கும் கொடுத்து மகிழ்ந்து ஈத்துவக்கும் இன்பத்தினை அடைவோமாக" என்று பெருமிதத்துடன் கூறுகின்றார்.

அக்காலப் புலவர்களைப்போலவே இக்காலப் புலவர்களும் வறுமை வாய்ப்பட்டிருந்தபோதிலும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்ப்பண்பாட்டைக் காயவிடாது பெருமிதத்துடன் வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வார்களா? அந்நாள் ஓர் பொன்னாள்.

வீழ்க நல்குரவு! வாழ்க பெருமிதம்!

# திருக்கோவையார் ஆராய்ச்சி

[சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாதபிள்ளை]

(சிலம்பு - உசு. பரல் அ. ௩சச-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

**பத்து**

குடிப்பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, அன்பு, உரு, நிறை, அருள், உணர்வு, திரு என்னும் பத்தும் நாடும் மொழியும் நன்னெறியும் பீடுற்று ஓங்கப் பெருந்தொண்டு இயற்று வார்க்கு இன்றியமையாத இயல்பாய் அமையும் நற்பண்புகளாம். பெருந் தொண்டாற்றலே பிறவிப் பெரும்பயன். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போன்று பெண்ணும் ஆணும் பெரும் பொருளால் கலந்தன்றிப் பெருந்தொண்டு இயற்றுதல் இயலாது. மென்மைசேர் அகங்கையும் வன்மைசேர் புறங் கையும் ஒத்தனவே அகமும் புறமும். அகம் காப்பாரை மாதர் எனவும் புறம் காப்பாரை மைந்தர் எனவும் கூறுவர்.

குறித்த பத்தினையும் குறிக்கும் தொல்காப்பிய நூற்பா வருமாறு :—

> "பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே."
>
> —தொல். பொருள் - உ௭௩.

**க. குடிப்பிறப்பு**

உயர்ந்த ஒழுக்கமுடைய குடும்பத்தில் பிறப்பது குடிப் பிறப்பு.

**உ. குடிமை**

குடும்ப ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாக மேற்கொண்டு இடையறாது ஒழுகுவது குடிமை.

**௩. ஆண்மை**

ஆண்மை என்பது ஆளுந்தன்மை; அஃதாவது ஆளப் படும் பொருளைப் பேணுதல். ஆடவர்க்கு அறமும் பொருளும் பேணுதல் ஆண்மை. மகளிர்க்கு இன்பம் பேணுதல் ஆண்மை. அறமும் பொருளும் புற நிகழ்ச்சியாதலின் புறம் எனவும், இன்பம் அக நிகழ்ச்சியாகலின் அகம் எனவும் கூறப்படும். எனவே ஆண்மை இருவர்க்கும் உரித்து.

௪. ஆண்டு

ஆணின் அகவை பெண்ணின் அகவையைவிட நான் காண்டு கூடுதல்.

௫. உருவு

'நல்ல என உறுப்புநூலவர் உரைக்கும் நலம் நிரம்பிய' செம்மையான வடிவம். இஃது,

> உழைப்பால் உடலழகாம் ஊணுல்ஆம் உள்ளம்
> மழையொழுக்கால் ஆம்உயிரின் மாண்பு.

என்பதனுன் அறிக. உரு - வடிவம்.

௬. அன்பு

"உருவு நிறுத்த காம வாயில்" என்பது செம்மையாக அமைந்த வடிவத்தின்மேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு. உருவு நிறுத்த - வடிவத்தின்மேல் நிகழ்கின்ற. காமம்- இன்பம். வாயில் - காரணம்; அஃதாவது அன்பு.

௭. நிறை

நெஞ்சை ஒருவழி நிறுத்தல். அஃதாவது கற்பு. கற்பு எனினும் நிறை எனினும் ஒன்றே; அஃது இருபாலார்க்கும் இறை அருளிய முறைசேர் ஒழுக்கம். இவ்வொழுக்கம் திரு வள்ளுவநாயனுர் அருளிய திருப்பாட்டுக்களான் உணர்க.

> " சிறைகாக்கும் காப்புஎவன் செய்யு மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை." திருக்குறள், ௫௭.
>
> " நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
> பேணிப் புணர்பவர் தோள்." திருக்குறள். ௯௧௭.

இவ்விரண்டு திருக்குறளும் முறையே பெண்களுடைய கற்பையும், ஆண்களுடைய கற்பையும் அறுதியிட்டு, உறுதி செய்து வலியுறுத்துவன. உய்த்துணர்வார்க்கு இவ்விரண்டு திருக்குறளும் ஏழு என்னும் எண்ணில் ஒத்து அமைந்திருப்பது வியப்பினைத் தரும்.

௮. அருள்

மக்கள் தொடர்புகொண்டு வாழும் தூநலம் உடையவர். அத்தொடர்பு பயனுல் மூவகைப்படும். ௧. தன் நயம். ௨. தன் நயமும் பிறர் நயமும். ௩. பிறர் நயம். தன் நயம் ஒன்றே அமைவது ஆசை. தன் நயமும் பிறர் நயமும் விரவி அமைவது அன்பு. பிறர் நயமே அமைவது அருள். இவ் அருள் அன்பு விதையினின்று தோன்றுவது. இவ் அருட் பயிர்க்குச் செய்

நிலம் இல்வாழ்க்கை. இப் பயிரை வளர ஒட்டாது கெடுக்கும் களை ஆசை. அருளே பிறவிப்பயனும் பெரும்பேறு நல்கும் துணையாகும்.

௯. உணர்வு

நாடாச் சிறப்பாம் நட்பு வாய்ப்பதற்கு வாயிலாகிய மூன்றனுள் சிறப்பும் முதன்மையும் வாய்ந்த உணர்ச்சி.

௧௦. திரு

தளரா ஊக்கமாம் உள்ள மிகுதி.

அழகு

'திருவளர் தாமரை' என்றதன்கண் காணப்படும் திரு என்பது அழகையே குறிக்கும் திருமகளைக் குறியாது, தன்னால் காதலிக்கப்பட்ட தன்னுயிராம் இன்னமிழ்தப் பெண்ணுக்கு ஒப்புச் சொல்லத் துணிந்தவன் ஒரு பெண் தங்கியிருந்த தாமரை என்று ஒப்புச் சொல்லான் ஆகலின்.

அடை இன்மையே சிறப்பு

தாமரை, காவி, குமிழ், கோங்கு, காந்தள் என்னும் பூக்கள் ஐந்தால் முகம், கண், மூக்கு, முலை, கை என்னும் ஐவேறு உறுப்புக்களும் உருவகம் செய்யப்பட்டன. அவற்றுள் பேணும் தன்மையாம் பெண்மைக்குச் சிறந்த உறுப்பு முலை. அதனைக் குறிக்கும் பூ கோங்கு. ஏனைய நான்கு பூக்களுக்கும் அடை கூறி இக் கோங்கு ஒன்றற்கு மட்டும் அடை கூறவில்லை. அது பொருந்துமா? என்று ஆராய்வார்க்குத் திருக்கோவையார்க்கு மெய்யுரை கண்ட பேராசிரியர் அடையின்மையே சிறப்பெனக் கூறினர். அதற்கு அவர் காட்டும் எடுத்துக்காட்டு கோவில் திருக்கோவில் என்று அடை பெறுகின்றது. கோவிலிலுள்ள ஏனைய பொருள்கள் எல்லாம் திரு என்னும் அடை பெற்றே திகழ்கின்றன. ஆனால் எல்லாவற்றினும் சிறந்த நாயனார் திரு என்னும், அடைபெற்றுத் திருநாயனார் என்று திகழவில்லை. அடையின்றி நாயனார் என்றே திகழ்கின்றனர் என்பதே. ஆதலால் சிறந்த பொருளுக்கு அடையின்மையே தனிச் சிறப்பாம் என்க.

கடவுள் காதல் :

உயிர்கள் காதலிக்கப்படும் பொருள் நினைவாகவே நின்று இன்பம் துய்ப்பின் அது பொருட் காதலாகவே கழிந்து அருளெய்துவதற்குத் துணையாவதில்லை. காதலிக்கப்படும் பொருளைக் காண்டல் தீண்டல் கருதல் கலத்தல் முதலிய எல்லா

வகையான இன்பத் துய்ப்புக்களினும் இறையை மறவா நினைவோடு இருக்கப்பெறின் அஃது அருள் எய்துவதற்கு வாயிலாகும். இதற்கு ஒப்பு கற்கும் மாணவனின் காதலும் கருத்தும் கல்வியிலேயே அழுந்தப்பதிந்து ஏனைய உண்டு உடுத்து ஒழுகல் முதலியவற்றைச் செய்யினும் கல்வியை மறவாமை ஆகும்.

இத் திருக்கோவையாரின்கண் ஒவ்வொரு பாட்டுத்தோறும் கடவுளின் திருப்பெயர் பண்பு புகழ் முதலிய பலவும் பயிலப் படுவதால் கடவுள்நினைவு மறப்பதற்கு வாயிலே இல்லை என்க. அது கலியாணவீட்டுப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் அக்கலியாணவீட்டுப் பெயர் நினைவே வந்துகொண்டிருப்பதை ஒக்கும்.

தாமரை, நீலம், குமிழ், கோங்கு, காந்தள் என்னும் ஐம்பூக்களும் மருதம், நெய்தல, முல்லை, பாலை, குறிஞ்சி என்னும் ஐந்திணைகளையும் குறிப்பனவாகும். இவற்றை ஒருபுடை ஒப்பாக மறைத்தல், அருளல், காத்தல், துடைத்தல், படைத்தல் எனக் கூறலாம். அறம், பொருள, இன்பம், வீடு, பேறு என்னும் ஐந்தும் முறையே துடைத்தல், காத்தல், படைத்தல், மறைத்தல், அருளல் எனக் கூறலாம்.

கடவுள் நினைவு மறவாமல் நிலைத்திருப்பதுபற்றி இத் திருக்கோவையார் "காமஞ்சான்ற ஞானப் பனுவல்"* எனக் குமர குருபர அடிகளாரும் அருளிச் செய்வாராயினர். பேராசிரியரும் 'ஞான யோக நுண்பொருள்' உண்டெனவும் உரைப்பாராயினர். 'பிழைப்பன் ஆயினும் திருவடிப் பிழையேன்' என ஆளுடைய நம்பிகள் அருளியதும் இக்கடவுள் காதலையே. கடவுள் காதலுடையார் கடவுள் திருவடி எய்துவர் என்பது உறுதி.

அகத்தமிழ் :

தாமரையால் மருதமும், காவியால் நெய்தலும், குமிழால் முல்லையும், கோங்கால் பாலையும், காந்தளால் குறிஞ்சியும் கூறப் பெற்றுள்ளமை நோக்கின் தில்லைக்கண் உள்ள திணைமயக்கம் கூறியவாறாகும். ஆனால், அவ்வவற்றினின்று 'சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்' என்பதன்படி இறுதியில் குறிஞ்சியினையே கூறியிருத்தலால் அகத்தமிழ் இலக்கணமே கூறியருளினார் என உணர்க. புணர்தலும் புணர்தல்நிமித்தமும் குறிஞ்சி.

பேறு :

கோவையின்பயன் வீடு பேறு. "களவொழுக்கம் எனப் பெயர் பெற்று வீடுபேற்றின் பயத்தது ஈசர் தில்லை என்றமையின்" எனப் பேராசிரியரும் உரைப்பாராயினர். இல்வாழ்க்கை

---

* 'கடங்கலுழ்' சிதம்பரமும்மணி. உ௫.

யின் பயன் வீடுபேறு என்பதே தமிழகத்தின் தனிப்பண்பு. அத் தொன்மைப்பண்பை வலியுறுத்துவதே ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்தின் மாண்பு. அந்நூற்பா வருமாறு :

"காமஞ் சான்ற கடைக்கோள் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."
—தொல். பொருள் - ககூஉ.

இல்லற இன்பத்தை நல்லறமாகத் துய்த்துக் காவல் அமைந்த கட்டிள மக்களோடும், வீடுபேற்றினை விரும்பும் தோழரோடும், அப்பேற்றினுக்கு உரிய கிழவனும் கிழத்தியும் கடவுள் பணியாகிய சீலம் நோன்பு செறிவு அறிவினைச் சிறந்தது அடையப் பழகுதல் இல்லறத்தின் பயனாகும். இல்லறம் என்பது வீடுபேறு எய்தப் பயிலும் பயிற்சி நிலையமாகும். அந் நிலையத்துச் செய்யுந் தொழில் எல்லாம் ஆண்டவன் நினைவோடு செய்யப்படின் அன்றே அது பயிற்சி நிலையமாகும். அதற்குத் துணை செய்யும் அருந் தமிழ் நூல் திருக்கோவையார்போன்ற அருள் நூல்களே ஆகும்.

புனைவு :

புனைவென்பது உள்ளதனைப் புகழ்ந்து அழகுறுத்துவது. இதனையே வருணனை என்பர். அங்ஙனம் புனையும் முறை இரு வகைப்படும். ஒன்று அடிதொட்டு முடிகாறும் புனைவது. மற்றொன்று முடிதொட்டு அடிகாறும் புனைவது. அவற்றுள் இத்திருப்பாட்டு முடிதொட்டு அடிகாறும் புனைதலாகும். அடியின் முடிவது வீடுபேற்றிற்கு அடிகோல்வதாகும்.

இத்திருப்பாட்டுக்கு மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே." —தொல். பொருள் - உ௫௬.

உ. ஐயம்*:

தலைமகன் தலைமகளைக் கண்ணுற்றபின்பு ஐம்பெரும் பூக்களாலும் அன்னநடையினை ஒக்கும் என்னும் துணிபினாலும் பெண் எனப் பெருங்காதல் கொண்டவன், இவள் தெய்வமோ? அன்றி மக்கள் உள்ளாளோ என ஐயுறுகின்றான்.

கூற்றுவன் தூதோ? உருவிலான் கருவியோ? ஒப்பில்லாத ஒருவடிவில் ஆணும் பெண்ணுமாய் ஒட்டித்திகழும் தொன்மைத்

* 'போதோ' திருக்கோவையார், உ.

திருக்கோலம் வாய்ந்த தில்லைக்கண் உள்ளாளாகிய மானுட மாதரோ? மடப்பத்தையுடைய மயிலோ? என்று ஐயுற்றான். பின் அவ்வகை சிறந்த திருஉருஉறையும் இடம் யாதாக இருக்கலாம் எனவும் ஐயுறுகின்றான்.

தாமரைப்பூவோ, வானமோ, நீரோ, பாம்புகளது உலகோ என ஐயுறுகின்றான். ஐயுற்று யாதோ சிறிதும் துணிதல் அரிது என்றனன்.

'தில்லைமாது' என்பது மகளிர் என்னும் பொருட்டாய் நின்றது.

திருவள்ளுவ நாயனாரும் இத்துறைக்கு அருளிய திருப்பாட்டு வருமாறு :

> "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
> மாதர்கொல் மாலும்என் நெஞ்சு." —திருக்குறள், ௧0௮௧.

கூற்றுவன் தூது, உருவிலான் கருவி, மடமயில் என்பனவற்றை ஒருபுடையாக ஆராயின், அறம் பொருள் இன்பம் உலகிடை நிலைத்து மாந்தர் உய்யத் தூண்டும் தெய்வத் துணையாகும்.

கூற்றுவனை மறந்தார் அருந்தவம் ஆற்றார். அருந்தவம் என்பது வாழ்க்கைத் துணையோடு மனம் ஒத்துச் செய்யப்படும் செம்பொருள் வழிபாடே. தனித்துச் செய்யப்படும் வழிபாட்டால் செய்வார் மட்டும் உய்வதால் அத்துணைப் பெரும்பயன் இன்று. துணையோடு செய்யப்படுவது அத்துணையும், துணையின்வழித் தோன்றிய தோன்றல்களும், சுற்றமும், சூழ்உலகமும் உய்யும். அம்மட்டோ, அவ்வவர்களைக்கொண்டு வழிபாடு செய்விக்கும் வழிமுறையுமாகும். இதனால் வாழ்க்கைத் துணையாம் மாண்புறு மகளிரை நோக்கியதும் அம்மகளிரை எய்த வேண்டும் என்னும் காதல் மெய்யாகத் தோன்றுவதாயிற்று. அது கிடைக்கும்வரை படுந்துன்பம் நோக்கியே கூற்றுவன் தூதோ என்றனன். கூற்றுவனை விலக்கும் தவஞ்செய்யத் துணையாம் திருவுரு தவவுருவேயாம். அதனால் அவ்வுருத் தவத்தைச் செய்யத் தூண்டும் திருவுரு. அப் பொருள் நினைப்பாகவே 'யமன்விடுத்த தூதோ' என்றனர்.

முன்னறிவிக்கும் எழுப்போசைமணி மறந்து தூங்குவார் வருந்திஎழ ஒலிப்பதுபோல் மணந்து தவம்செய வருந்தித் தனித்து வாழ்வார் பொருந்துமாறு திருந்த உணர்த்துவதால் முதற்கண் வருத்தம் தோன்றுமேனும் பின் பெருத்த வாழ்வுண்டு. அதனை நினைப்பூட்டும் திருமணம் முன்தோன்றும்

நிலையா வருத்தம்பற்றிக் கூற்றுவன் தூது என்று கூறப்பட்டது. 'சிறந்தது பயிற்றுதற்கு' வாயிலாகிய இல்லறமும் தவமே. இவ் இல்லறம் எய்துதற்கே தனித்துத் தவம் எய்துதல். அவ்வுண்மை ஆளுடைய அரசர் திருப்பாட்டானும் உணர்க.

"பெருந்திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனி தன்பால் அங்கொரு பாகமாகத்
திருந்திட வைத்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே."
—௪. ௭௩ - ௧.

வருந்து - வகுந்து; வகுத்து. வழிவகைகள் வகுத்து, வகுந்து என்பது வருந்து என எதுகை நோக்கித் திரிந்து நின்றது. வான்தவங்கள் - அழியாத பெருந்தவங்கள்.

தவத்துக்கு முயலத் தூண்டும் தவவுருவாம் தலைவியின் தோற்றம் அறம் ஆகும்.

அத்தலைவியை மணந்து நாடு உய்ய நல்கும் நன்மகப்பெற்று வாழ்வதே பொருளாகும். அதுவே தம்பொருள். அக்கருத் துணர்த்தவே திருவள்ளுவ நாயனார்,

"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்." —திருக்குறள், ௬௩

என்றருள்வராயினர்.

மக்கட்பேற்றாலேயே உயிர்க்கு உறுகண் ஓம்பல் முடியும். மாந்தர் பிறவிக்கு வாராதொழியின் வீடுபேறு எய்தார். மக்கள் மணந்துகொள்ளாவிடின் பிறவிக்கு மாந்தர் வரும்வாயில் இல்லா தொழியும். எனவே மக்கட் பேற்றிற்கு வழிசெய்யாமை மறைமுகமாக மாந்தர்க்கு உறுகண் செய்வதே ஆகும். இக் குறிப்பருளும் வள்ளுவர் திருப்பாட்டுக் காண்க:

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு." —திருக்குறள், உ௬௧.

உற்றநோய் - குடும்பச் சுமை. உயிர்க்கு உறுகண் - மக்களைப் பேணுமை. மக்களே மன்உயிர்த் துன்பத்தையும் போக்குவர் என்னும் வாய்மை காட்டவே முன்னோன் முதல்வியை மணந்து முருகனைத் தந்தருளினன். இது குறித்துத் தேற்றும் சித்தியார்த் திருப்பாட்டுக் காண்க:

"கண்நுதல் யோகி ருப்பக் காமன் நின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித்து இமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப் பேரின்பம் அளித்தது ஓரார்."
—சித்தியார், ௧. ௭௩.

ஆகவே காமன் கருவி என்பது மணந்து மக்களை ஈன்று மன்னுயிர்க்கு இன்பஞ்செய்யத் தூண்டும் இயல்பாகும். இதுவே பொருள்.

'மடமயில்' என்பதனால் இன்பந்துய்ப்பார் இளமை நலம் குன்றாமல் துய்க்கவேண்டும் என்னும் உண்மை காட்டுவது பெறப்படும். மக்கட்பேற்றின் பொருட்டு மெய்யுறு புணர்ச்சியும், வாழ்க்கைத் தவத்தின் பொருட்டு உள்ளப் புணர்ச்சியும் வேண்டுவவாயின. மெய்யுறு புணர்ச்சியிற்றலைப்படுவார் மகளிரது மென்மைத் தன்மையின் நன்மையை நன்கு உணரல்வேண்டும்.

குடும்ப வாழ்க்கையைத் தவ வாழ்க்கையாகக் கோடல் வேண்டும். அத்தவ வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகலே பெண்டிர்க்குத் தற்காத்தல் ஆகும். கணவனை ஒழுகச் செய்தலே தற்கொண்டாற் பேணுதலாகும். அமையாது கணவன் பொருட் பெண்டிர்மாட்டுப் போய்வரின் வெறுத்து ஒறுத்து ஒதுக்காது ஊடிப் பொறுத்துத் திருத்துவதே வாழ்க்கைத் துணைவியின் மாண்பாகும். அதனால் வருவதே பெரும்புகழ். அதுவே தகைசான்ற சொற்காத்தல் ஆகும். இவைகளைக் குறிக்கொண்டு காத்தலில் சோர்வின்றியிருப்பது என்பது திருநீலகண்டநாயனார் மனைவியார் போன்று தன் இன்பம் நீத்தேனும் தலைவனைத் திருத்தலே தனிப்பெருந்தவம் என்று கோடல் என்பதாகும். இவற்றான் வருவதே மெய்யின்பம். இதனைத் தருவதே பெண்தன்மை.

அப்பெண்பாலார் மெல்லியலார், நல்லார், வல்லார், தீமைக்குப் பொல்லார், செல்லார் பிழைநெறி, நில்லார் பிறன்கடை என்று உட்கொண்டு மயில்போன்று காட்சியின்பந் துய்ப்பதே அழிவிலா விழுமிய இன்பம் ஆகும்.

இவை எல்லாம் புலனாகவே திருவள்ளுவ நாயனார்,

> "மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
> செவ்வி தலைப்படு வார்." —திருக்குறள், ௧௨௮௯.

என்றருளினர்.

இதனை விளக்கி விரித்துக் குமரகுருபர அடிகள் அருள்வது காண்க:

> "கருமம் சிதையாமே கல்வி கெடாமே
> தருமமுந் தாழ்வு படாமே—பெரிதுந்தம்
> இன்னலமுங் குன்றாமே ஏரிளங் கொம்பன்னார்
> நன்னலம் துய்த்தல் நலம்." —நீதிநெறி விளக்கம், ௭௮.

# அன்பு

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(செல்வி, சிலம்பு உஎ, பரல் அ, பக்கம் ௩௫௫ தொடர்ச்சி)

அவ்வாறு சென்றவர் காட்டிலுள்ள செடி கொடிகளின் தழைகளை யெல்லாம் பிடுங்கிக்கொண்டுவந்து கையாற் கசக்கிச் சாறெடுத்து இறைவன் கண்களிற் பெய்தார்; அதிலும் செந்நீ ரொழுக்கு நிற்காமை கண்டு அலமந்தார்; ஏங்கினார்; விழுந்தார்; அழுதார்; அரற்றினார்.

அப்பால் அவருக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. 'ஊனுக்கு ஊன் கொடுத்தால் நன்மை என்பார்களே. இரும்பாலன்றோ இரும்பைக் கொந்துகின்றோம்; நல்லதை நல்லதைக்கொண் டன்றோ முடிக்கின்றோம். ஆகவே, இவ் விறைவன் கண் ஊன முற்றது. இனி, நம் கண்ணைப்பிடுங்கி அப்பினால் நன்றாமன்றோ? பார்ப்போ' மெனக் கருதித் தம் கையிலிருந்த கூரிய அம்பொன் றெடுத்தார்; தம் ஒரு கண்ணை அகழ்ந்தெடுத்தார்; ஆண்டவன் கண்ணிருக்கும் இடத்தே அப்பினார். உடனே கண்ணிலிருந்து செந்நீரொழுக்கு நின்றது. இவர் மகிழ்வும் அதுகண்டு மிகுந் தது. ஆடினார், பாடினார்; இனி மருந்து நல்லதொன்று கண்டு கொண்டேன். இனி என்னையென்று மகிழ்ந்து மகிழ்ந்து கூத் தாடினார். அப்போது இறைவன் மற்றொரு கண்ணினும் வடிக் கண்ணீர் பரப்பினான். அதனால் இவர் முன்போற் கவன்றா ரில்லை. ஏன்? நல்ல மருந்தொன்று கண்டுபிடித்துள்ள கார ணத்தினால். உடனே ஓர் அம்பை யெடுத்துத் தம் கண்ணைத் தோண்டியெடுக்க எண்ணினார்; இக்கண்ணையும் அகழ்ந்து விட்டால் எம் இறைவன் கண்ணிருக்கும் இடம் தெரியாதே யென்றெண்ணித் தம் இடக்காலை இறைவன் நீரொழுக்குங் கண்ணோரத்தில் ஊன்றிக்கொண்டு நின்று,

"உண்ணிறை விருப்பினோடும் ஒருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்."

உடனே அவ்வாண்டவன் அடையாளமாகிய இலிங்க உருவினின் றும் ஓர் ஒலி பிறந்தது; அவ்வொலி,

"நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பஎன்
அன்புடைத் தோன்றல் நில்லுகண் ணப்ப."

என்று அழைத்துக்கொண்டு கையால் அவ்வம்பைப் பிடித்துக் கொண்டு 'என் வலத்தின் மாறிலாய் நிற்கவென்று மன்னுபேர் அருள்புரிந்தார்.'

அவர் அவ்வாறே என்றும் இறவாத பிறவாத இயற்கை நெறி யெய்துவாராயினர். எனவே கண்ணப்பர் தம் அன்புக்கு வேறு எடுத்துக்காட்டு உண்டோ? நம் உடலகத்தே கண்ணிற் சிறந்த உறுப்பில்லையாவதும் காண்டுமன்றே. அதையே பிடுங்க மனம் ஒருப்படுமாறல்—அதுவும் இரண்டு கண்களையும் அகழ்வதானால் அவர் அன்பிருந்தவாறென்னே! என்னே! முள் தைத்தால் நடுங்கி விதிர்விதிர்க்கும். மக்களுக்குள் தம் கண்ணைப் பிடுங்கி அப்பும் கருத்துடையர் ஒருவர் இருப்பாரானல் அவர் எத்துணையர்! எவ்வளவு சிறந்தாரென்று எடுத்துரைக்கவும் வேண்டுங்கொல்?

இவர் அன்பின் திறத்தை வியந்த நக்கீரதேவ நாயனர் தாம் ஆக்கிய 'திருக்கண்ணப்பதேவர் திருமறம்' என்னும் நூலில்

"தத்தையாம் தாய்தந்தை நாகனும் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனும்—தித்திக்கும்
திண்ணப்ப னும்சிறுபேர் செய்தவததாற் காளத்திக்
கண்ணப்ப னய்நின்றன் காண்."

என்று வியந்து பாராட்டிக் கூறுவாராயினர்.

மணிமொழிப் பெருமான் தம் திருவாசகமறையில்,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையுமாட் கொண்டருளி."

என்று கண்ணப்பரை அன்பன் என்றுகூடக் கூறுது அன்பு எனப் பண்பியைப் பண்புப் பெயரானே கூறியருளவாராயினர். முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள், இக் கண்ணப்பரின் செயற்கரிய தொண்டினைச் சிறப்பித்து

"நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லேன்."

என்று இவர் ஆறே நாளில் கண்ணிடந்தப்பி இறையருள் பெற்றதைப் பாராட்டியதும் காண்க. இதில் இவ்விரு பெரியார்களும் தம் அன்பின்திறம் கண்ணப்பர்தம் அன்பின் வியத்தகு சிறப்புக்கு ஒவ்வாததைக் கூறித் தம்மைத் தாழ்வாக்கிக் காட்டுவதும் தெளிக.

இனி இவ் வரலாறு உண்மையாக இருத்தல் சாலாது, பிற் காலத்தில் எழுந்த புராணக்கதை யென்பர்; அவர் 'இறை உரு இலிங்கம்; அது கல்லான் இயன்றது. அக்கல்லில் நீ ரொழுகுவது எங்ஙனம்? பொய்யுரை; புராணப் புளுகு' என வாய் நாணுதுரைப்பர். அவர் கூற்று உண்மைதானு? என்பது காண்பாம்.

இறைவன் கூறுகள் பல. அவன் காற்றாக இயக்குகின்றான்; நீராக நின்று உயிர்களை வளர்க்கின்றான்; காராக மழை பொழிகின்றான்; ஞாயிறாக விளக்குகின்றான்; திங்களாகக் குளிர்கின்றான்; பனியாக நடுக்குகின்றான்; அழலாக அழல்கின்றான். உலகத் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் ஒருவனாகத் திகழ்கின்றான்; அவன் எல்லாமாய் அல்லதுமாய் இருக்கின்றான். அத்தகையோன் கல் உருவில் ஏன் செந்நீர் ஒழுகச் செய்திருத்தல் கூடாது? மின்னொளி விளக்கம் (Electric light) நமக்கு வெளிச்சந் தருகின்றது எங்கே ஓர் வெளியிலா? உருவற்ற தனி வெளியிலா? அன்று! அன்று! பின் யாண்டு? கண்ணாடி உருண்டைக்குள் (Bulb) நின்றன்றோ விளங்குகின்றது. அம் மின்னாற்றலின் உருவம் யாது? நெட்டையா? அன்றிக் குட்டையா? அன்றித் தட்டை வடிவமா? தடித்த பெரிய உருவமா எனின் அது நம் கட்புலன்கொண்டு காணவொண்ணாதது; வேறு புலன்கட்கும் எட்டாத ஒன்று. எனவே, அது எவ்வுருவும் தன்னுருவாய்க்கொண்டு இயங்குகின்றது. இவ்வொரு மின்சாரத்துக்கே இவ்வளவு அளப்பொணா ஆற்றலிருக்குமானால் அப் பேரொளிப் பிழம்பாய் நிற்கும் பரம்பொருள் ஆற்றலை எடுத்துரைக்கவும் வேண்டுங்கொல்! மின்சார ஒளி கண்ணாடி உருண்டைக்குள் நின்று காட்சியளிப்பது போன்றே, ஒவ்வொரு அடையாளமாம் குறிகளில் நின்றே இறை தோன்றும். அவ்வாறே, ஈண்டுக் கண்ணப்பருக்கு அவர் கொண்ட இலிங்க உருவில் நின்று தோன்றி அருள்புரிந்தது.

கண்ணப்பர் ஆரா அயரா அன்பராக இலங்கினார். அவர் தமக்கென உயிர்தாங்கினாரில்லை; அண்ணலுக்காக உயிர் தாங்கினார்; அவன் காவல் புரிபவராக அமர்ந்தார்; அவனுக்கு உணவூட்டும் ஏவலனாக இருந்தார். ஊறில்லா ஒருவனுக்கு ஊறு வருமேயென்று உள்ளம் ஒடுங்கினார் என்றால், அவ் அன்பின் ஆழத்தை எவ்வாறு அளவிட்டு உரைப்பது! இவர் அன்பின் பெருமையை உலக மக்கட்குக் காட்டவே இறை இவ் விளையாட்டைச் செய்தான்; அருளினான்; அவர் அன்பை உலகெலாம் அறிந்தது; கண்டது; இன்புற்றது. அவ் வன்புநெறி இஃதாயினும் உலகினரால் கொண்டு நடத்த இயலவில்லை. இயலாத ஒன்றே அது. கண்ணன்றோ? இறையிடத்தேதே வேறெவ்வகையிலேனும் அன்பு முகிழ்க்கின்றதோ எனின், இல்லை! இல்லை! எங்கெங்கோ ஓடிக்கொண்டிருக்கின்றது. தீமையைப் பெருக்க ஆசான் ஒருவனும் வேண்டுவதின்று. களைகள் மண்டுதற்கு விதைபோட வேண்டா. தாமே முளைக்கின்றன; வளர்கின்றன; பயிர்கட்கு ஊறு செய்கின்றன. பயிரை வளர்த்துப் பயன்காண

வேண்டுவார் அக்களைகளைக் கல்லுதல் வேண்டும்; அவைகளைக் கிழங்கோடு பற்றிப் பறித்து எறிதல் வேண்டும். அதை எவ்வாறு தோண்டித் தோண்டி எறியினும், அது மீண்டும் மீண்டும் முளைத்து ஊறு செய்தலைக் காண்கின்றோம். இத்தன்மையை ஒத்ததே மக்கள் ஒழுகலாறும். எத்தனையெத்தனை பெரியார் உலகில் தோன்றினர்; இருந்தனர்; தாம் கண்ட அரும்பெரும் உண்மைகளை, உயர்வு முறைகளை, கதை வாயிலாகக் கட்டுரை வாயிலாக, பாடல் வாயிலாக உணர்த்தினர். அதற்காகத் தம உடல் பொருள் ஆவிகளையுங்கூடக் கொடுத்தனர்? அவர் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றன. கிறித்துபெருமான் சிலுவையில் தம்முயிர் கொடுத்ததூஉம், சாக்கிரட்டீசு நஞ்சுண்டு உயிர்நீத்ததூஉம், புத்தர்பெருமான் தம் அரசச் செல்வத்தைத் துறந்து ஆண்டியாய்த் தவக்கோலந் தாங்கி நின்றதூஉம், காந்தியடிகள் கொலைஞன் குண்டுக்கிரையாயினதூஉம், மெய்ப்பொருள் நாயனார் முத்திநாதன் வாளுக்கு இலக்காயதூஉம் இன்னும் பலப்பல பெரியாரெல்லாம் துன்பத்தை இன்பமாகக் கோடற்கு உற்ற காரணமென்னை? தம் குடி வாழவா? புகழை நடுதற்கா? பிறவேறு பயன்கள் கருதியா? அன்று! அன்று! அஃதெல்லாம் அன்புநெறி ஒன்றை நிலைநிறுத்தவேயன்றோ?

இவ்வன்பு உணர்வுவயமாய்க் கண்ணப்பர்தம் வாழ்க்கையில் தோன்றிற்று; அது முறுகி வளர்ந்தது; அப்பயனால் இறையை உணர்ந்தார். இறையின் இலிங்க வடிவு அவர்க்கு வெறுங் கல்லாகக் காட்சியளிக்கவில்லை; அதனை ஓர் வடிவமாகவும் கருதினாரில்லை. அவர் அதை உண்மை இறைவடிவமேயென்று கண்டார். இலிங்கமே இறை ஆயிற்று; அதனால் காண்பன எல்லாம் இறையே ஆயிற்று; அங்கே ஆண்டவன் தோற்றமளித்தான்; கண்களில் செந்நீர் ஒழுக்கினான்; அவர் அச்செயலைக் கல்லினின்றும் போதருவதாகக் கருதின், கண்ணைக் கொடுக்க மனம் எழுமா? என்னே அன்பின் உள்ளம்; அவ்வுள்ளம் இறை கண்களென்றே கருதிற்று; என்னினும் இனியான் கண்ணுக்கு இஃதுறுவதோ என்றன்றே கண்ணைக் கொடுத்து விண்ணவனானார்.

எனவே, அடுத்தது காட்டும் பளிங்குபோல் நாம் எதைக் குறிக்கோளாகக் கொண்டமைத்து வழிபடுகின்றோமோ அங்கே ஆண்டவன் தோன்றுவன்; காட்சியளிப்பன்; அங்கே ஐயவுணர்வு அரும்பின் ஒன்றுங் கிட்டாது. இஃது உண்மையறிந்தோர் கண்டமுறை. ஓர் அழகிய சிற்பவுருவைப் பார்ப்போம். அது கல்லின் இயன்றது; அதைக் கல்லென்று கண்டால்

கல்லைத் தவிர வேறென்ன தோன்றும்? சிற்பவுணர்வுக் கண் கொண்டு பார்த்தால் கல்மறைய, அங்கே முகத்தின் அழகு, கண்ணின் நட்பப் பார்வை, கை கால்கள் முதலிய எல்லா உறுப்புக்களின் இயற்கைத்தன்மைகள் யாவும் புலனாகி அப் பார்ப்பவனை இன்பவுணர்வில் ஆழ்த்தி அவனை என்றும் மாறா இன்புடையவனுக்கிப் பண்படுத்தும். இவ்வாறே கடவுள் உணர்வும் எனக்கொண்மின்! இதனைக்கொண்டே திருமூலரும்,

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பாரமுதற் பூதம்."

என்று உலகுண்மை நிலையை உணர்த்துவாராயினர்.

இந்நிலையை உலகச் சிற்றின்பத் துறையில் வைத்துக் காணினும் இதுவே புலனாவதை உணரலாம்.

ஒரு காதலனுக்கு அவன் காதலி அன்பு கலையாத இணைப் புண்ட காலத்தில் வேப்பங்காயைத் தந்தாலும்கூட அவள் கையால் தொட்டது கரும்புக்கட்டிபோல் இனிப்பாகத் தோன்று கிறது; அன்பு திரிந்து வெறுப்புத் தோன்றிய காலத்தில் இனிய நறுஞ்சுவைக்கனியை அவள் தரினும் கைக்கின்றது. ஏன்? அன்று கொடுத்தவளும் அவள்தான்; இன்று கொடுத்தவளும் அவள்தான்; வேறுபாடு என்னை? மனவேறுபாடு, மனநிலைத் திரிபு. அன்று அமிழ்தாகத் தோன்றினாள்; இன்று நஞ்சாகக் காணப்படுகின்றாள்; இதில் வியப்பொன்றும் இல்லை. மனந் திரிந்தால் யாவும் திரியுமன்றோ? மனவொருமையே எல்லா வற்றையும் நல்கவல்லது. 'மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்றார் செந்நாப்போதாரும்.

ஆகவே, அன்பு மக்களின் உள்ளக்கேணியினின்றூறி இயற்கையாக எழும் ஊற்று. அவ்வூற்றுச் சுரக்க மனப் பண் பாடு வேண்டும். அம் மனப் பண்பாட்டினிடையே தோன்றும் மன இசைவே அன்பு என்பது. அவ்வன்புடையவர் நிலை பேச எளிமையன்று; அஃது அருமைப்பாடு மிக்குடையது. இவ் வன்பிடையே இயங்கிவரும் கருவியே இப்பேருலகம்.

# கிளியோட்டுதலறியாள்

[திரு. மா. ரா. இளங்கோவன்]

செல்வமும் சிறப்பும் பொருந்திய பெருநகரம் அது. அழகுற அமைந்த இல்லங்களும், அணிசெயப்பெற்ற தெருக்களும், பசுமையான காட்சியை நல்கிய வயல்களும் உண்மையிலேயே காண்போர் உள்ளத்தைக் கவரத்தக்கதாய் அமைந்திருந்தது.

தினைப்புனம் காக்கின்றாள் அழகுடை அணங்கொருத்தி. அவள் எழில்மிக்கு விளங்குகின்றாள். அழகின் எல்லை; அன்பின் செல்வி; அவள் இரு விழிகள் இதழ்விரிந்த செந்தாமரைகள்; அவளது கருங்கூந்தல் கருமுகிலை ஒத்தது; அவள் சிரிப்பு, அவள் நடை, அவள் பேச்சு காணத்தக்கது—கண்டு சுவைக்கத்தக்கது என்றெல்லாம் பலவாறு அவளைப்பற்றி ஊரார் பேசிக் கொண்டனர்.

தினைப்புனம் காக்கும் தையல், கையில் கோலுடன் இருந்து, தினைக்கதிர்களைக் கிளிகள் கவராதிருக்கும்வண்ணம் காக்கின்றாள். அவள் பாட்டைப் பாடிக் கையின் கோலைச் சுற்றிக் கிளியோட்டித் தினைப்புனம் காக்குந்திறம் காணத்தக்கதேயாகும். கடமையில் தவறாது காரிகை செயலாற்றவே, தாயும் தொடர்ந்து மகளைத் தினைப்புனம் காக்க அனுப்பிவந்தாள். தினைப்புனத்திற்குத் தலைவியுடன் தோழியும் செல்லுவாள்.

ஒருநாள் வேடன் ஒருவனைத் தலைவி கண்டாள். தலைவியை வேடனும் கண்டான். இருவரிடையே ஓர் அதிர்ச்சி. அழகின் எல்லையாய் விளங்கிய தலைவியைக் கண்டதும் அவள் மானுட மகள்தானா என்ற ஐயம் வேடனுக்கு ஏற்பட்டது. அவள் கண்கள் இமைத்தலையும், தாள்கள் பாரொன்றலையும் கண்ட வேடன் அவள் மானுடமகளே என்ற தெளிவு பெற்றான். பின்னர், அவளைத் தான் அடையின், தன் நிலை யாதாகும் என எண்ணினான். அவ்வெண்ணம் அவனுக்கோர் புதிய உணர்வை அளித்தது. அவன் அவளையே நோக்கினான். தலைவி நாணத்தால் தரையை நோக்கினாள். வேடன் அவளை—அவளது அழகைச் சுவைத்தவாறிருந்தான். திடீரென்று அவன் தன் முகத்தைத் திருப்பினான் வேறோர்புறம். தலைவி, அவனைக்கண்டு அவனழகை வியந்தாள். சட்டென்று நிமிர்ந்தான் வேடன்; தலைவி, தன்னைக் கண்டு முறுவலிப்பதைக் கண்டான். அவன் தமிழிலக்கியங்களைக் கற்ற ஒருவன்.

“யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்” —திருக்குறள், ௧0௯௪.

என்ற குறளடியை அவன் வாய் முணுமுணுத்தது. அது தலைவிக்குக் கேட்கவில்லை. பிறகு தலைவன் (வேடன்) பிரிந்து சென்றான். தலைவி, தலைவன் தன் கண்ணினின்று மறையும் வரை கண்டிருந்தாள். தலைவனது திடீர்த் தோற்றமும் மறைவும் தலைவியின் உள்ளத்தில் ஏதோ ஒருவகையான மாறுதலைச் செய்தது.

தோழி, தலைவியின் நடத்தையில்—செயலில் மாறுதலைக் கண்டாள். ஆயினும் காரணமறியாது கலங்கினாள். அவள் தலைவனுக்கும் தலைவிக்கும் இடை நடந்த காட்சி, ஐயம், தெளிவு முதலியன அறியாள்; தலைவியைக் காரணம் கேட்டாள்; 'உடல் நலம் இல்லை' என்ற பதிலையே பெற்றாள்; வருத்தமுற்றாள்; உண்மை யறியவேண்டும் என்ற எண்ணம் கொண்டாள்; அதற்குரிய காலத்தை எதிர்நோக்கி நின்றாள். நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் தோழி வெளியிடம் சென்றிருந்தாள். வேடன் வந்தான். தலைவியுடன் உரையாடிக்கொண்டிருந்தான். கிளிகள் தினைக்கதிரைத் தின்ன ஆரம்பித்தன. தலைவி, தலைவனுடன் உரையாடுதலிலேயே மூழ்கிவிட்டாள். தோழி வந்தாள். தலைவியின் செய்கையைக் கண்டாள்; தினைக்கதிர்கள் நிலை வரவர மோசமாவதைக் கண்டாள்; வேடனை உற்று நோக்கினாள்; நல்ல அழகும் கூர்த்த அறிவும்கொண்ட அவன், தலைவிக்கு ஏற்றவனே என்பதையும் உறுதி செய்துகொண்டாள். அவர்களின் நல்வாழ்வுக்குத் தன்னாலான உதவியைச் செய்ய விரும்பினாள். தலைவி, தோழியைக் கவனிக்கவேயில்லை. அவள் தலைவனுடன் பேசிக்கொண்டிருந்தாள். அதில் அவளுக்குப் பேரின்பம். பின்னர்ப் பிரிவு அவர்களைத் தழுவியது. பிரிந்தனர் இருவரும். எப்பொழுதும் போலவே தோழியும் தலைவியும் பேசி வந்தனர்.

பிறகு, தோழியிடம் தலைவி, தான் வேடன்பால் கொண்ட காதலைக் கூறினாள்; அவனை அடைந்து, அவனோடு வாழுவதே தன் விருப்பம் என்றும், அங்ஙனம் இல்லையேல் தான் உயிர் வாழ்வதில் பயனில்லை என்றும் கூறினாள். தலைவனை அடைதற்குரிய வழியைக் கூறுமாறு தோழியை வேண்டினாள்.

ஒரு நாள் தலைவன் வந்தான். தலைவி அவனை நாடிச் செல்வதைக் கண்டாள் தோழி. அவள், தலைவியை விளித்து, "தலைவி, தலைவன்பால்கொண்ட பேரன்பால் நீ செய்யற்பாலதனை அறியாயாயினும் யான் உரைப்பதனைக் கேள்: நமது புனத்திலுள்ள தினைகளிற் பல, கதிர்வந்து கொய்தற்கு முன்பே வெறுந் தட்டைகளாகக் காணப்படுகின்றன. அவை கிளிகளால் கவரப் பட்டுவிடுகின்றன என்பது உனக்குத் தெரியுமா? நீதான் பன் மலர்க்கண்ணிசூடி, மலைதொறும் செல்லும் வேடனைப் பெறும்

முயற்சியளவில் அமைந்தனை; இனி, நீ, நின்மாலை அசையுமாறு எழுந்தெழுந்து, கிள்ளைகளை ஓட்டும் ஓசையை அவற்றின் பேச்சுக்கிடையே பலகாற் சொல்லிச்சொல்லி ஒழுகாயாயின், நம தன்னை, 'இவள் "கிளியோட்டுதலறியாள்" என முடிவு செய்து, தினையைக்-காத்தற்குப் பிறரை அமர்த்துவள்; பின் நீ நினைக்கும் நின் தலைவனது அகன்றிட்ட மார்பு உனக்கு அரிதாகும்' என்று தலைவன் கேட்கும் முறையில் தலைவிக்கு அறிவுரை புகன்றாள்.

இதனைச் செவியுற்ற தலைவன், தலைவியைப் பிரிய நேருமோ என அஞ்சினான்; என்ன செய்வது என்பது விளங்காமல் தவித்தான். தோழியை அணுகி யோசனை கேட்டான். அவள், "தலைவ, காலந்தாழ்க்காது இவளை வரைந்துகொள்வாயாக" என்றாள்.

தோழியின் அறிவுரை தலைவிக்கும் தலைவனுக்கும் பொருத்தமாய்த் தோன்றியது. அவர்கள் தோழியின் முன்னிலையில் மணமக்களாயினர். தலைவியும் தலைவனும் தோழியின் திறனமைந்த அறிவையும் கடமை உணர்ச்சியையும் பாராட்டினர்.

இத்தகைய அழகிய—பொருள் நுட்பம் கொண்ட காதற் காட்சிகள் பல உண்டு. இஃது அகநானூற்றிலுள்ள ஓர் பொன்னோவியம். உயர்ந்தோங்கி வளர்ந்து, வளமுற்றுத் திகழ்ந்தது பழந் தமிழ்க்காதல் என்பதைப் இப் பொன்னோவியம் பொலிவுறக் காட்டுகின்றது. தோழியின் அறிவுரை—ஆக்கவுரை படித்து மகிழ்தற்கு உரியது. அது வருமாறு:

" மெய்யில் தீரா மேவரு காமமொ
டெய்யா யாயினும் உரைப்பல் தோழி!
கொய்யா முன்னும் குரல்வார்பு தினையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
ஆங்காங் கொழுகா யாயின் அன்னை
சிறுகிளி கடிதல் தேற்றாள் இவளெனப்
பிறர்த்தந்து நிறக்குவ ளாயின்
உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே. —அகம். 28

இப்பாடலைப் பாடியவர் பாண்டியன் அறிவுடை நம்பி என்பவராவர்.

# மீன் கொத்தி

[திரு. பி. எல். சாமி, பி. எஸ். ஸி.]

நீரில் துடுமெனப் பாய்ந்து வெள்ளிமீனை செம்பொன்னலகில் கௌவி நொடிப்பொழுதில் மறையும் நீலமணிப் பறவையைப் பலரும் பார்த்திருப்பர். நாட்டுப்புறங்களில் நீர்நிலைகளிலும் கிணறுகளிலும் காணப்படும் இப்பறவையைத் தற்காலத்தில் 'மீன் கொத்தி' என்று அழைக்கின்றனர். இந்த மீன் கொத்திப் பறவை சிரல், சிச்சிலி, தித்திரி, பொன்வாய்ப்புள், பொன்னுந்தட்டான் என்று பல பெயர்களில் இலக்கியத்திலும் பேச்சுவழக்கிலும் அழைக்கப்படுவதைப் பலரும் அறியார்.

மீன்கொத்தியில் நீலநிறமான பெரிய மீன்கொத்தி, சிறிய மீன்கொத்தி, கருமையும் வெண்மையும் கலந்த மீன்கொத்தி என மூன்றுவகை மீன்கொத்திகளை நாட்டுப்புறங்களில் காணலாம். நீலநிற மீன்கொத்தி உருவில் இரண்டு வகைப்படும். மற்றப்படி நிறம், அமைப்பு, வழக்கம் ஆகியவற்றில் இரண்டுக்கும் வேற்றுமை கிடையாது. இம் மீன்கொத்திகளில் கருமையும் வெண்மையும் கலந்த பறவையைப்பற்றிச் சங்கநூல்களிலும் பிற்கால நூல்களிலும் யாதொரு குறிப்பும் காணேம். இயற்கையில் காணும் அழகையெல்லாம் சொற்களில் ஓவியமாகத் தீட்டிய பண்டைப் புலவர்கள் கண்களில் இந்நீலமணிப் பறவை படாது போகுமோ? உள்ளுறை உவமமாகவும், உவமையாகவும் சங்கப் பாடல்களில் இப்பறவை கையாளப்படுகின்றது.

இளமீன்கொத்தியும் முதுமையான மீன்கொத்தியும் ஒரு கிணற்றில் மீன் பிடிக்கலாயின. கரையில் அமர்ந்து காத்துக் கிடந்து துள்ளும் ஒரு வெள்ளிமீனைப்பிடிக்க முதுசிரல் பறந்தோடியது. ஆனல் உயரப்பறந்து வந்த இளஞ்சிரல் துடுமெனப் பாய்ந்து வெடுக்கெனக் கௌவிப் பறந்தோடியது. இச்செய்தியை அருகில் தலைவி இருக்கச் சேரிப்பரத்தை தலைவனைக் கவர்ந்து சென்ற செய்தியோடு ஒப்பிட்டு உள்ளுறை உவமமாக ஒரு சங்கப்பாடல் கூறுகின்றது. இந்த உள்ளுறை உவமம் மிக அழகானது.

இப்பறவையின் சிவந்த அலகைச் செம்முல்லை அரும்புக்கு ஒப்பிட்டு நற்றிணைப் பாடலொன்று கூறுகிறது.

> "சிரல்வா யுற்ற தளவிற் பரலவற்
> கான்கெழு நாடற் படர்ந் தோர்க்கு" (நற்றிணை. சுக)

மீன்கொத்தி நீர்நிலைகளில் மூழ்கி எழும் செய்தியை பதிற்றுப் பத்துப்பாடல் ஒன்று அழகாக வர்ணிக்கின்றது.

" மின்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் " (பதிற்றுப்பத்து. இ: சஉ.)

(கயத்திலே மூழ்கி சிரல் எழுகின்ற காலத்து அதன் வாய லகை ஒக்கப். புண்களை இழை கொள்கின்ற காலத்து அப்புண் களின் உதிரத்திலே மறைந்தெழும் ஊசி) உதிரம் பூசிய ஊசி போன்றது இதன் அலகு என்று இப்பாடல் கூறுகின்றது. அக் காலத்தில் ஊசியால் புண்களைத் தைத்துக் குணமாக்கும் வழக் கம் இருந்ததையும் இதிலிருந்து உணருகிறோம். மற்றொரு அக நானூற்றுப் பாடல் இதன் சிறகையும் நிறத்தையும் வருணிக்கும்.

" வளிசினை உதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிரற்சிற கேய்ப்ப வறற்கண் வரித்த
வண்டுண் நறவீ துமித்த நேமி" (அகம். ருஉச)

சிதறிக்கிடந்த காயாவின் நீலமலர் சிரலின் நீலச்சிறகேய்ப்ப இருந்தது என்று இப்பாடல் கூறும். பச்சைநிறக் கள்ளியின் தலை, கிச்சிலிபோன்று தோன்றுவதாக மற்றொரு அகப்பாடல் கூறும். பச்சைக்கள்ளிச்செடியின் நுனியில் சிவந்த நீண்ட அரும்பு தோன்றுவதைக் கண்டிருக்கலாம். அந்தச் சிவந்த அரும்போடு தோன்றும் திருகுகள்ளியின் தலையைச் சிவந்த அலகும் நீல உடலும் உடைய சிரலோடு ஒப்பிட்டது பொருத்த மானது. செய்மையிலிருந்து காணும்போது இந்த உவமையின் பொருத்தம் புலப்படும்.

" பரற்றலை போகிய சிரற்றலைக் கள்ளி "

என்ற இப்பாடல் வரி உவமையைக் கூறுகின்றது. சிவப்பு அலகையும் நீலச்சிறகையும் புலவர்கள் வருணித்ததிலிருந்து இது நீல மீன்கொத்தி என்று கொள்ளலாகும். கருப்பு அலகை யுடைய கருப்பும் வெண்மையும் கலந்த மீன்கொத்தி பழைய நூல்களில் கூறப்படவில்லை என்று தெரிகிறது.

சிரல் என்று சங்க நூல்களிலும் பழைய நூல்களிலும் மீன்கொத்தியை அழைத்து வந்தனர். உரையாசிரியர்கள் சிரல் என்றால் கிச்சிலிப்பறவை என்று பொருள் கூறியுள்ளனர். இந்தச் சிச்சிலி என்ற பிற்காலப்பெயர் மீன்கொத்தியின் ஒரு முறையான தனிப்பட்ட குரலின் காரணமாக வந்திருக்கலாம் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தனிப்பட்ட சில இயற்கை ஓசைகளைக் கூறும் ஒரு பாடலில் மீன்கொத்தியின் குரலோசை கூறப்பட்டுள்ளது.

"சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைத்தாம்
உச்சிமலை நீர்விழுக்கா டொண்பருந்து—பச்சைநிற
வேயினிலை வீழ்ச்சியுடன் செங்கா னிழற்பறவை
ஏயுங்கால் ஓசை யியல்பு."

இப்பாடல் பெருங்கதையில் வருகின்றது. சிச்சிலியின் ஓசை முதலில் கூறப்பட்டிருக்கிறது. இதன் குரலை உற்றுக் கேட்டவர்க்கு 'சிச்சிலி' என்ற சொல்லோசைக்கும் குரலோசைக்கும் தொடர்பு இருக்கும் என்ற எண்ணம் உண்டாகாமற்போகாது. ஆதலின் காக்கை என்ற பெயர்போல் ஒலிக்குறிப்பால் 'சிச்சிலி' என்ற பெயர் உண்டாயிற்று என்று கருதுவது பிழையானதன்று. பெருங்கதையில் சிச்சிலிக்குப் பொருள் தித்திரி என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் 'தித்திரி' என்ற பெயரும் குரலோசை காரணமாக வந்திருக்கவேண்டும் என்பதை எளிதில் உணரலாம். நீர்நிலைகளில் மீன்களைப்பிடித்து வாழும் வெண்மையும் கருமையுமான ஒரு பறவையை (Tern) வடநாட்டில் 'தித்ரி' என்று அழைக்கின்றனர். தமிழில் அப்பறவையைச் 'சிறகி'* என்று அழைக்கிறார்கள் என்று நினைக்கிறேன். வடநாட்டில் இப்பறவைக்கு 'தித்ரி' என்று பெயர் வந்தது அதன் குரலோசைகாரணமாக என்று சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். இப்பறவையின் குரலோசையும் தனித்த வகையானது ஆதலின் இவ்விரு பறவைகளின் குரலோசையின் தனித்தன்மை வாழும் இயல்பு ஆகியவைகளை நோக்கி வடநாட்டில் வழங்கும் பெயரைத் தவறாக மீன்கொத்திக்கு தமிழ்நாட்டில் வழங்கியிருக்கலாம். அல்லது தமிழிலும் சிச்சிலி போன்று 'தித்திரி' என்ற பெயரும் ஓசைகாரணமாக எழுந்திருக்கலாம். 'சிரல்' 'சிறகி' என்ற இரு சொற்களுக்குமுள்ள சொல்லோசை ஒற்றுமையும் கவனிக்கவேண்டியதொன்று.

தென்னார்க்காட்டில் நாட்டுப்புற மக்கள் மீன்கொத்தியை இன்றும 'பொன்னுந்தட்டான்' என்று அழைக்கின்றனர். பேச்சு வழக்கில் தவழும் இச்சொல் மிகவும் அழகுடைய சொல். இது இலக்கியத்திலும் பயிலுகிறது. ஆழ்ந்த அழகிய பொருளுடையது. தற்காலம் படித்தோரிடைப் பயிலும் பெயரான 'மீன்கொத்தி' மிகப் பிற்காலத்தது. ஆங்கிலத்தின் மொழி பெயர்ப்போ என்று ஐயுறும்படி அமைந்துளது. கருத்தாழமும் அழகும், இலக்கியப் பழமையும் கொண்ட சொற்கள்

* இது வாத்துப்போன்ற வடிவும் அலகும் அமைந்தது ; கூட்டமாகப் பறந்து சென்று நெல் வயல்களில் தடுமெனை விழுந்து நெற் கதிர்களைத் தின்று விளைபுலத்தை அழிக்கும் தகையது. நீரில் நன்றாக நீந்திச் செல்லும். ஆகலான் இது மீன்கொத்தி யன்று.

நாட்டுப்புறத்தார் நாவில் நடமாடுகின்றன என்பதற்கு இப்பெயரும் ஒரு சான்றாகும். பெருங்கதையில் 'நாடுபாயிற்று' சுகூ-ஆம் வரியில் மீன்கொத்தி 'பொலம்புள்' என்று அழைக்கப்படுகிறது. இதற்கு உரை 'பொன்வாய்ப்புள்' 'சிச்சிலி' என்று கூறப்பட்டிருக்கின்றது. பொலம்புள், பொன்வாய்ப்புள்ளே பொன்னாந் தட்டானாகியது என்பதில் ஐயத்திற்கிடமில்லை. பொன்போன்று சிவந்த வாயுடைய இப்பறவை நீர்நிலைகளின்மேல் சுற்றிச்சுற்றிப் பறந்து துடுமெனப் பாய்ந்து இரை கௌவி எழும் தன்மையுடையது. அதுபோலவே நீர்நிலைகளின்மேல் வட்டமாகச் சுற்றிச்சுற்றி வந்து சடுதியில் பாய்ந்து பூச்சிகளைப் பிடித்து எழும் ஒரு பூச்சியைத் 'தட்டான் பூச்சி' என்று அழைக்கின்றனர். 'தட்டான்' என்றும் அப்பூச்சியை அழைக்கின்றனர். இத்தட்டான் பூச்சி நீர்நிலை ஓரக்கரைகளில் வாழ்ந்து சுற்றிச்சுற்றிப் பறந்து சிறுபூச்சிகளைத் தின்று வாழும் தன்மையோடு மீன்கொத்தியின் தன்மையை ஒப்பிடலாம். அதனால்தான் 'பொன்னாந்தட்டான்' என்று 'தட்டான்' பெயரைச் சேர்த்து வழங்கினர், நாட்டுப்புற மக்கள். 'கிணற்றிலிருந்து எழும் தட்டான் பூச்சி' (Dragon fly) என்று டென்னிசன் தன் கவிதையொன்றில் பாடியபோது டென்னிசனின் நுண்மாணுழைபுலத்தை வியந்தனர் சிலர். அதே நுண்ணறிவைப் 'பொன்னாந்தட்டான்' என்ற பெயரிலும் காணலாம். சுற்றிச்சுற்றிப் பறக்கும் தட்டான்பூச்சியைத் 'தட்டான்' என்று அப்படிப் பறக்கும் காரணத்தால் அழைத்தனர் இதைத் தவறாகத் தற்காலத்தில் சில இடங்களில் 'தும்பி' என்கின்றனர். 'தும்பி' பண்டை நூல்களில் தேனீயைக் குறித்து வந்தது. சிறுபிள்ளைகள் நின்றுகொண்டு கைகளை விரித்துப் பம்பரம்போல் சுழலும் விளையாட்டைத் 'தட்டான் சுற்றுதல்' என்று கூறுகின்றனர். வட்டமாகச் சுற்றுதலால் 'தட்டான் சுற்றல்' என்று வழங்கியது. சுற்றிச்சுற்றிப் பறக்கும் அதே காரணத்தால் தட்டான்பூச்சியும் மீன்கொத்தியும் 'தட்டான்' 'பொன்னாந் தட்டான்' என முறையே அழைக்கப்பட்டன. எவ்வளவு நயமும் ஆழமும் உடைய சொல் இப்பொன்னாந்தட்டான் என்பது இதிலிருந்து விளங்குகிறது. தமிழிலேயே இவ்வளவு பொருளுடன் இத்தனை பெயர்தாங்கி வழங்கிய பறவை 'மீன்கொத்தி'யைத் தவிர வேறென்ன இருக்கிறது?

---

# நிகழ்கால வினை

[திரு. ஞா. தேவநேயன், எம். ஏ.]

தொல்காப்பியர்,

" நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே "

என்னும் பெயரெச்ச வாய்பாட்டு நூற்பாவில் (719), 'செய்கின்ற' ('செய்கிற') என்னும் நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாட்டைக் கூறாமையானும்; வினையெச்ச வாய்பாட்டு நூற்பாவில் அவர் முக்கால வினையெச்சங்களையும் கூறியிருப்பினும், நிகழ்கால வினையெச்சத்தில் நிகழ்கால இடைநிலை (கின்று—கிறு) இயல்பாய் அமையாமையானும் ;

" முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும் "

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு (725),

" மலைநிற்கும், ஞாயிறியங்கும் "

என்பன போன்றும்,

" மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே "

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு (727),

" தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்றான் நிரயம் புகும் " என்பனபோன்றும், எதிர்காலத்திற்குரிய 'செய்யும்' என்னும் முற்றையே உரையாசிரியன்மார் எடுத்துக் காட்டி வந்திருப்பதானும ; 'செய்கின்றான்' என்னும் வாய்பாட்டுச் சொல் உருத்தெரியாதவாறு திரிந்தன்றித் தொல்காப்பியத்தில் ஓரிடத்தும் வாராமையானும் ; 'செய்கின்ற' என்னும் வாய்பாட்டுச்சொல்லோ அங்ஙனந் திரிந்தேனும் அதன்கண் வாராமையானும் ; இடையியலில் முக்கால இடைநிலைகளைக் குறிப்பிடுமிடத்து,

" வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும் "

என்று (735) தொல்காப்பியர் பொதுப்படவே தொகுத்துக் கூறியிருத்தலானும் ; 'கின்று' என்னும் இடைநிலைபெற்ற நிகழ்

காலவினை தொல்காப்பியர் காலத்து உண்டோ என்று சிலர் மருளவும், இல்லை என்று சிலர் பிறழவும், இடமாகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் முக்கால வினைகளும் இருந்தன என்பதும், நிகழ்காலத்திற்குத் தனிவினை இருந்திருத்தல் வேண்டும் என்பதும்,

"காலந் தாமே மூன்றென மொழிப" (684)

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்" (685)

"மூந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" (725)

"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைசசொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்" (726)

"மிக்கதன் மருங்கின் வினைசசொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே" (727)

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை" (730)

"இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி" (732)

"ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்" (733)

என்னுந் தொல்காப்பிய நூற்பாக்களானேயே பெறப்படும்.

இனி, சேனாவரையரும்,

உண்கின்றனம், உண்கின்றாம், உண்கின்றனெம், உண்கின்றேம், உண்கின்றனேம்; உண்கின்றன, உண்கின்ற; நடக்கின்றது, உண்கின்றது என்னும் கின்றிடைநிலை வினைமுற்றுக்களை நிகழ்கால வினைமுற்றுக்களாகத் தம் உரையில் எடுத்துக்காட்டியுள்ளார் (தொல். வினை. 15, 19, 20 உரை).

பண்டைச் சேரநாடாகிய கேரள அல்லது மலையாள நாட்டில், இறந்தகால நிகழ்கால வினைமுற்றுக்கள் இன்று பாலீறு நீங்கிப் பகுதியும் இடைநிலையும் மட்டும் அமைந்த அளவில் வழங்குகின்றன.

எ. ௬.

### இறந்தகாலம்

| தமிழ் முற்று | தமிழ் எச்சம் | மலையாள முற்று |
|---|---|---|
| செய்தான் | செய்து | செய்து |
| அடித்தாள் | அடித்து | அடிச்சு |
| அறிந்தார் | அறிந்து | அறிஞ்ஞு |
| ஆயிற்று | ஆய் | ஆயி |
| வந்தன | வந்து | வந்நு |
| வாழ்ந்தேன் | வாழ்ந்து | வாணு |
| பாடினோம் | பாடி | பாடி |
| புறப்பட்டாய் | புறப்பட்டு | புறப்பெட்டு |
| வாங்கினீர் | வாங்கி | வாங்ஙி |

### நிகழ்காலம்

| தமிழ் முற்று | ஈறு நீங்கிய தமிழ் வடிவம் | மலையாள முற்று |
|---|---|---|
| செய்கின்றான் | செய்கின்று | செய்யுந்நு |
| அடிக்கின்றாள் | அடிக்கின்று | அடிக்குந்நு |
| அறிகின்றார் | அறிகின்று | அறியுந்நு |
| ஆகின்றது | ஆகின்று | ஆகுந்நு |
| வருகின்றன | வருகின்று | வருந்நு |
| வாழ்கின்றேன் | வாழ்கின்று | வாழுந்நு |
| பாடுகின்றோம் | பாடுகின்று | பாடுந்நு |
| புறப்படுகின்றாய் | புறப்படுகின்று | புறப்பெடுந்நு |
| வாங்குகின்றீர் | வாங்குகின்று | வாங்ஙுந்நு |

இதனால், 'கின்று' என்னும் நிகழ்கால இடைநிலை மலையாளத்தில் 'குந்நு' அல்லது 'உந்நு' என்று திரிந்திருப்பதைக் காணலாம்.

'செய்யும்' என்னும் வாய்பாட்டு எதிர்கால வினைமுற்று, பால்காட்டும் ஈறில்லாததாயும், பலபாற்குப் பொதுவான ஈறுள்ளதாயும், பலுக்குவதற்கு எளிதாயும், இடைநிலையின்றிச் சுருங்கியதாயும், இருத்தலின்; அதுவே மலையாளத்திலும் (ஊவிட) எதிர்கால வினைமுற்றாக வழங்கி வருகின்றது.

பண்டைச் சேரநாட்டுத் தமிழிற்போன்றே, முதற்கால மலையாளத்திலும் வினைமுற்றுக்கள் பாலீறுகொண்டு வழங்கியமை, பழைய மலையாளச் செய்யுளாலும், யூதருக்கும் சிரியக் கிறித்தவர்க்கும் அளிக்கப்பட்ட பட்டயத்தாலும், பழமொழிகளாலும் அறியக்கிடக்கின்றது. பாலீறுகொண்ட வினைமுற்றுக்கள் இன்றும் மலையாளச்செய்யுளில் ஆளப்பெறும். வினைமுற்றை அடிப்படையாகக்கொண்ட வினையாலணையும் பெயர்கள், மலையாள உலக வழக்கில் இயல்பாக வழங்குகின்றன. ஆதலால்,

12-ஆம் நூற்றாண்டிற்குமேல் சோழபாண்டித் தமிழரொடு உறவுவிட்டுப் போனபின், சொற்களைக் குறுக்கி வழங்குவதற் கேதுவான வாய்ச்சோம்பலாலும், புலவரின் இலக்கணக் கட்டுப் பாடு அற்றுப்போனமையாலும், குடுதுறு—கும்டும் தும்றும் விகுதி பெற்ற தன்மைவினைமுற்றுக்களின் தொடர்ப்பாட்டினாலும், மலையாளநாட்டுமக்கள் வினைமுற்றுக்களைப் பாலீறு நீக்கி வழங்கத் தலைப்பட்டுவிட்டனர்.

"அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்
அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" (வினை. 5)

"கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே" (வினை. 6)

என்று கி. மு. 8-ஆம் நூற்றாண்டிற்கு முந்திய தொல்காப்பியத் திலேயே கூறப்பட்டிருப்பதாலும், குடுதுறு—கும்டும் தும்றும் ஈற்றுத்தன்மை வினைமுற்றுக்கள் நெடுகலும் செய்யுளில் ஆளப் பெற்று வந்திருப்பதாலும், முற்காலத்தில் பாலீறில்லா முடிவி லேயே தமிழ்வினைமுற்று வழங்கி வந்திருப்பதாகத் தெரிகின் றது. இதுவே மொழிநூற்கும் பொருந்தும் முடிபாகும். ஆயினும், மலையாள நாட்டில் பாலீற்று வினைமுற்றே அவ்வீறு நீங்கிப் பழைய வடிவில் வழங்கி வருகின்றது.

நிகழ்கால வினையாலணையும் பெயர்களும் தொழிற்பெயர் களும் பெயரெச்சங்களும் உள்ள, சில மலையாளப்பழமொழி களும் சொற்றொடர்களும் வருமாறு :—

'கடிக்குந்நது கரிம்பு, பிடிக்குந்நது இரிம்பு.'
'அலக்குந்நோன்*றெ கழுத போல.'
பாபம் போக்குந்நோர் ஆர்?
"பாரம் சுமந்நும் நடக்குந் நோரே!" (மத். 11: 28.)

'அஞ்சு எரும கறக்குந்நது அயல் அறியும், கஞ்சி வார்த்துண்ணுந்நது நெஞ்சு அறியும்.'
'அந்நந்நு வெட்டுந்ந வாளிந்நு நெய்யிடுக.'
'உறங்ஙுந்ந பூச்ச எலிபிடிக்க இல்ல.'
'கரயுந்ந குட்டிக்கெ பால் உள்ளு'
'குரெக்குந்ந நாயி கடிக்க யில்ல.'
'மண்ணு திந்நுந்ந மண்டெலியெ போல.'

---

* மலையாளத்தில் றன்னகரம் இல்லை. ஆயினும், மலையாள ஒலியைக் குறித்தற்பொருட்டு இங்கு றன்னகரம் ஆளப்பெற்றது.

இம்மலையாளப் பழமொழிகளிலும் சொற்றொடர்களிலும் வந்துள்ள நிகழ்காலச் சொற்கட்கு நேர் தமிழ்ச்சொற்கள் வருமாறு :—

| மலையாளம் | தமிழ் | |
|---|---|---|
| கடிக்குந்நது | கடிக்கின்றது | (வி. பெ) |
| பிடிக்குந்நது | பிடிக்கின்றது | ,, |
| அலக்குந்நோந் | அலக்குகின்றான் | ,, |
| போக்குந்நோந் | போக்குகின்றான் | ,, |
| நடக்குந்நோர் | நடக்கின்றார் | ,, |
| கறக்குந்நது | கறக்கின்றது | (தொ. பெ.) |
| உண்ணுந்நது | உண்கின்றது | ,, |
| வெட்டுந்ந | வெட்டுகின்ற | (பெ. எ.) |
| உறங்ஙுந்ந | உறங்குகின்ற | ,, |
| கரயுந்ந | கரைகின்ற | ,, |
| குரெக்குந்ந | குரைக்கின்ற | ,, |
| திந்நுந்ந | தின்கின்ற | ,, |

இவ் எடுத்துக்காட்டுக்களால், 'செய்கின்றான்' என்பது 'செய்யுந்நாந்' என்றும், 'செய்கின்றது' என்பது 'செய்யுந்நது' என்றும், 'செய்கின்ற' என்பது 'செய்யுந்ந' என்றும், மலையாளத்தில் திரிவது தெளிவு. வினையாலணையும் பெயர்களுள், அஃறிணைப் பெயர்களாயின் அவற்றின் அகரமுதல் ஈறுகள் (அ, அவ) திரியாதும், உயர்திணைப் பெயர்களாயின் அவற்றின் ஆகாரமுதல் ஈறுகள் (ஆன், ஆள், ஆர்) ஓகாரமுதலாகத் திரிந்தும்*, வழங்குகின்றன.

(எ. டு.)

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| செய்கின்றது | செய்யுந்நது |
| செய்கின்றான் | செய்யுந்நோந் |

'கின்று' என்னும் நிகழ்கால இடைநிலையைக் 'குந்நு' அல்லது 'உந்நு' என்று திரித்து வழங்கும் வழக்கம், சேர நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கின்றது. அந்நாடு மழை மிகுதியாகப் பெய்யும் மலைநாடாதலின், அங்கத்துத் தமிழ் மக்கள் பேச்சில் மூக்கொலிகளான மெல்லினவெழுத்துக்கள் பேராட்சி பெற்றுவந்திருக்கின்றன.

(எ. டு.)

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| நான் | ஞான் |
| நாஙகள் | ஞங்கள் |
| தந்து | தந்நு |
| துடஙகி | துடங்ஙி |
| வீழ்ந்து | வீணு |

* ஆகாரத்தை ஓகாரமாக ஒலிப்பது மலையாளியர் இயல்பு. காலெஜ் (College) என்பதைக் கோளெஜ் என்றும், சாக் (Chalk) என்பதைச் சோக் என்றும், அவர் ஒலித்தல் காண்க.

நான் என்னுஞ் சொல்லின் முதலெழுத்து மெல்லினமே யாயினும், அது மேலும் ஒருபெரு மெல்லொலியான ஞகர மாகத் திரிந்திருப்பது, மலையாளமக்கள் பேச்சின் மெல்லோசை மிகுதியைத் தெளிவாக எடுத்துக்காட்டும். இங்ஙனம் மூக் கொலிகள் சேரநாட்டுத் தமிழிற் பேராட்சிபெற்று வந்திருப் பினும், நூன்மொழி அல்லது இலக்கியமொழி செந்தமிழாகவே யிருத்தல் வேண்டுமென்னும் இலக்கண மரபுபற்றி, சேரநாட்டு இலக்கியமும் செந்தமிழாகவே இருந்து வந்திருக்கின்றது. கொங்குநாட்டைச் சேர்ந்த வடார்க்காட்டுப் பாங்கரில் இன்று கொச்சைத் தமிழே வழங்கிவரினும், அங்கும் இலக்கியத் தமிழ் செந்தமிழாகவே யிருந்துவருதல் காண்க.

வடார்க்காட்டுத் தமிழுக்கு எடுத்துக்காட்டு வருமாறு :—

இசுத்து இசுத்து ஒச்சான். (இழுத்து இழுத்து உதைத் தான்.)

கொயந்த வாயப்பயத்துக்கு அய்வுது. (குழந்தை வாழைப் பழத்திற்கு அழுகிறது.)

பசங்க உள்ளே துண்ராங்க. (பையன்கள் உள்ளே தின் கிறார்கள்.)

கண்ணாலம் மூய்க்கணும். (கலியாணம் முடிக்கவேண்டும்.)

வந்துகினு போயிகினேக் கீரான். (வந்துகொண்டு போய்க் கொண்டே யிருக்கிறான்.)

சேரநாட்டுச் சொற்கள் பல செந்தமிழுக்கொவ்வா விடினும், திசைச்சொல் வகையில் அவற்றுள் ஒன்றிரண்டு இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

> "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
> றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (880)

> "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
> தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" (883)

என்று திசைச்சொல்லும் செய்யுளுக்குரியதென்றும், அது கொடுந்தமிழ்நாட்டு வழக்கென்றும், தொல்காப்பியத்திற் கூறப் பட்டிருத்தல் காண்க.

நிகழ்கால வினையாலணையும் பெயர்கள் சேரநாட்டியல்புப் படி, முதலாவது பின்வருமாறு திரிந்திருத்தல் வேண்டும்.

| செந்தமிழ் | சேரநாட்டுக் கொடுந்தமிழ் |
| --- | --- |
| செய்கின்றான் | செய்குந்நான்—செய்குநன |
| செய்கின்றது | செய்குந்நது—செய்குநது |
| செய்கின்ற | செய்குந்ந—செய்குந |

ண ந ன என்னும் மூவெழுத்துள்ளும், முதல்முதல் தோன்றியது நவ்வே. ரகரத்தின் வன்னிலையாகிய றகரம் தோன்றிய பின்பே, அதற்கினமான னகரம் தோன்றிற்று. இதனாலேயே, றனக்கள் நெடுங்கணக்கில் யமக்களின் பின் வைக்கப்பெறாது, இடையினத்தின்பின் இறுதியில் வைக்கப்பெற்றுள. முதற்காலத்தில் தந்நகரமே றன்னகரத்திற்குப் பதிலாக வழங்கி வந்ததென்பதற்கு, பொருந், வெரிந், பொருநை முதலிய சொற்களே போதிய சான்றாகும்.

'செய்குந்நான்' என்னும் வடிவம், சற்றுப் பிற்காலத்தில் குகரம் நீங்கி, செய்யுந்நான்—செய்யுநன்—செய்நன் என முறையே திரிந்திருக்கின்றது. இங்ஙனமே, 'செய்குந்ந' என்னும் பெயரெச்சமும், செய்யுந்ந—செய்யுந—செயுந என முறையே திரிந்திருக்கிறது.

'செய்நன்' என்ற வாய்ப்பாட்டு வடிவிலேயே, கீழ்க்காணும் பெயர்கள் அமைந்துள்ளன.

கொள்நன்—கொழுநன்* = கணவன்.

பொருநன் = போர் செய்கின்றவன்.

மகிழ்நன்—மகிணன் = இன்புறும் மருதநிலத் தலைவன்.

வாழ்நன்—வாணன் = வசிக்கின்றவன்.

வருநர், பாடுநர், இகழுநர், வாழ்நர், அறைநர், அடுநை (முன்னிலை யொருமை), விடுநை (மு. ஒ.), தருந, வல்லுநர், களையுநர், பருகுநர், கூறுநர், பொருநர், மலர்க்குநர், உடலுநர், நவலுநர், முயலுநர், வருந, தப்புந, பேணுநர், மேம்படுந! (விளி), கொய்யுநர், ஓம்புநன், அறியுநர், ஈகுநர், காமுறுநன், கொழுநன், வேண்டுநர், தொடக்குநர், செறிக்குநர், யாக்குநர், அறிநை (மு. ஒ.), வாணர், என்னும் புறநானூற்றுச் சொற்கள், 'செய்நன்' அல்லது 'செய்யுநன்' என்னும் வாய்ப்பாட்டில் வந்த படர்க்கை முன்னிலை வினையாலணையும் பெயர்த்திரிபுகளாம். இத்தகைய சொற்களைப் பிற சங்க நூலினும் சங்க மருவிய நூலினும் பரக்கக் காணலாம். தொல்காப்பியத்திலேயே பல நூற்பாக்கள் இத்தகைய சொற்களைக் கொண்டுள்ளன. அவையாவன :—

" இயல்பா குநவும் உறழா குநவும் என்று "　　　(151)

* கொள் கொம்பு என்பது கொழுகொம்பு என்று திரிந்திருத்தல் காண்க. கொள்நன் என்பது பற்றுகின்றவன் அல்லது கூடுகின்றவன் என்று பொருள்படுவது.

" இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர் " (158)

" வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும் " (159)

" நெடியதன் இறுதி இயல்பா குநவும் " (400)

" கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும் ;
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும் " (483)

" சொன்முறை முடியாது அடுக்குந வரினும் " (718)

" புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும் என்று" (735)

" தத்தங் கிளவி அடுக்குந வரினும் " (912)

" பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மருங்கின் ஆஅ குநவும
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும் "

" பாலறி மரபிற் பொருநர் கண்ணும் " (1021)

" அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும் " (1171)

" நினையுங் காலைக் கேட்குநர் அவரே " (1452)

" சொல்லுந போலவும் கேட்குந போலவும் " (1456)

இங்ஙனம், கின்றிடைநிலை பெற்ற நிகழ்கால வினையாலணையும் பெயர்களின் திரிந்த வடிவுகள் தொல்காப்பியத்திலேயே வந்திருக்க, 'செய்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாட்டைத் தொல்காப்பியர் கூறாதது குன்றக் கூறலேயாம்.

'செய்யா' என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால உடன்பாட்டு வினையெச்சத்துடன், நிற்றல் இருத்தல் கிடத்தல் பற்றிய இறந்த கால எச்சமுற்றுக்கள் தொடர்ந்துவரும் தொடர்ச் சொற்களினின்று, 'ஆநின்று,' 'ஆவிருந்து,' 'ஆகிடந்து' என்னும் இடைப் பகுதிகளைச் செயற்கையாகப் பகுத்துக்கொண்டு, அவற்றையும் நிகழ்கால இடைநிலைகள் எனப் பிற்காலத்து உரையாசிரியரும் இலக்கணவாசிரியரும் கூறுவது பொருந்தாது. நிகழ்கால இடைநிலை' 'கின்று' எனும் ஒன்றே. 'கிறு' என்பது அதன் தொகுத்தலே.

(தொடரும்)

# செய்திகளும் குறிப்புக்களும்

## சைவ சித்தாந்த வகுப்பு, மயிலம்

முப்பாலாகிய திருக்குறள்போன்று முப்பொருள் உண்மை செப்பும் செந்தமிழின் நந்தாப் பொது நூல் சைவசித்தாந்தம். அந்நூல் விளக்கும் வாய்மை, செம்பொருளைச் சேர்ந்தழியா தின்புறுதல், மெய்கண்டார்—தம் முணர்வின் சித்தாந்தம்தான், என்பதே.

இத்தகைய வகுப்பு தமிழ்நாடு எங்஭ணும் நடைபெறுதல் வேண்டும். சிவத்திரு சிவஞானபால்ய அடிகள் அருள் துணையால் மயிலம் மலை முருகன் திருமுன்னில் நடத்தப்படுகின்றது. 3—5—'53 முதல் 25—5—'53 வரை நிகழ்வதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. நேரம் காலை மணி 10 முதல் 11½ வரை. மாலை மணி 6 முதல் 8 வரை. 'வகுப்பில் கலந்துகொள்பவர்கள் வித்துவான் அல்லது புலவர் வகுப்பில் வெற்றிபெற்றவராக இருத்தல் வேண்டும். சிவஞானபோதச் சிற்றுரையும், மெய்கண்டநூல் மூலமும் வைத்திருத்தல் வேண்டும்.' 'வகுப்பில் கலந்துகொள்பவர்கள் தகுதி பெற்ற பதினைவர்களுக்கு இருவேளை உணவு நன்கொடையாக அளிக்கப் படும்' எனவும் தெரிகின்றது.

வகுப்பினை நடத்தும் ஆசிரியர் தகுதியும் உரிமையும் சால்பும் உடைய உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார், B. A., L. T. (கணிதப் பேராசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்) அவர்கள் ஆவர். வகுப்பு இனிது நிகழ்ந்து எல்லா நலமும் எளிதின் விளையக் கல்லால் நிழலுறை செல்வனை வாழ்த்துதும்.

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 69-ஆம் ஆண்டு நிறைவுவிழா

இவ்விழா நாளிது மேத்திங்கள் 23, 24-ஆம் நாட்களில் நடைபெறும். மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் திருப்புறம்பயம் கட்டளை மேற்பார்வை சிவப்பெருந்திரு, மாணிக்கவாசகத் தம்பிரான் அடிகளார் விழாப் பேரவைக்குத் தலைமை தாங்குவார்கள். திருவாளர்கள், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், ஆறுமுகநாவலரவர்கள், வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள், திருமதி, சி. பிருந்தாதேவியா ரவர்கள் முதலாயினோர் விரிவுரையாற்றுவார்கள். சபையைச் சார்ந்த பாகம் பிரியாள் மாதர் கழக ஆண்டு நிறைவுவிழாவும் திருமதி, சி. பிருந்தா தேவியார் தலைமையில் 25-ஆம் தேதி நடைபெறும். விளக்கமான நிகழ்ச்சி நிரல் அமைச்சரிடம் பெற்றுக்கொள்ளலாம் என அமைச்சர் அறிவிக் கின்றார்.

## தேமுத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலையின் 27-வது ஆண்டு நிறைவுவிழா

இவ்விழா, 8—5—'53 வெள்ளிக்கிழமை மாலை 3 மணி அளவில் நடைபெறும். பேராசிரியர் உயர்திரு, ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

அவர்கள் தலைமை தாங்குவார்கள். 'அப்பர் அருண்மொழி' என்னும் பொருள்பற்றி திருமிகு, S. ஆறுமுக முதலியார், M. A. B. O. L. L. T. அவர்கள் (தமிழ்ப் பேராசிரியர், ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை,) விரிவுரையாற்றுவார்கள் என்று செயலாளர் அறிவிக்கின்றார்.

## திருவள்ளுவர் திருநாளும் அதனைக் கொண்டாடும் முறையும்

இதுபற்றிக் கொழும்பு பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். தமிழ்மறைக் கழகத் தலைவர் அவர்கள் நம் கழகம் போன்ற பல கழகத்தையும் ஆதீனங்களையும், தனிப்பட்ட பெரியார்களையும் அன்புடன் உசாவித் தங்கள் கருத்தையும் இணைத்து மிகச் சிறப்பாக வெளியீடு ஒன்று வெளியிட்டுள்ளார்கள். பெரும்பாலும செந்தமிழ்ச்செல்வி சிலம்பு 27-பரல் 6-இல் வெளிவந்ததை யொட்டியதேயாகும்.

அவர்கள் வெளியீட்டின் சிறப்புறு கருத்தின் சுருக்கம்.

திருவள்ளுவர் திருவிழாவை வைகாசித்திங்கள் பனைநாள் என்று சொல்லப்படும் அனுடத்திலே கொண்டாடுதல் வேண்டும். வீடுகளிலும் ஊர்களிலும் கொண்டாடும் முறைகளையும மாண்புறத் தெரிவித்துள்ளார்கள்: திருக்குறள் ஊர்வலம், திருக்குறள் வகுப்பு, சொற்பொழிவுகள், பேச்சுப்போட்டிகள், இசைவிருந்துகள், திருக்குறள் மாநாடு, திருவள்ளுவர் வழிபாடு முதலியன செய்தல் வேண்டும் என்பதே.

குறிப்பு: திருக்குறளைப் பரப்பு முறையில் மிகச்சிறந்தன அதன்கண் காணப்படும் அந்தனை சொற்களும் எழுத்திலும் பேச்சிலும் இன்றியமையாது எல்லாராலும் கையாளப்படுதல், படுவித்தல் வேண்டும். நாடோறும் பத்தொன்பது அதிகாரங்களாக ஓதிவரின் கிழமைக்கு ஒரு முறை முழுநூலும் ஓதியவர்களாவோம்.

## வடமொழி பற்றிச் சென்னை முதலமைச்சர் கருத்து

பெரும்பூதூர் வடமொழிக்கல்லூரி வித்தியா விலாசினிப் பேரவையின் வெள்ளி விழா 17-4-53-ல் நிகழ்ந்தபோது தலைமை தாங்கிய சென்னை மாநில முதலமைச்சர், திரு. ச. இராசகோபாலாச்சாரியாரவர்கள் 'வடமொழி உயிரிருக்கிற மொழியல்ல; நமக்கு அதைப் பேசும் வலிமையில்லை. அது மிகக்கடுமையான மொழியென்பதில் ஐயமில்லை. வடமொழி படித்தவர்களைப் பாருங்கள்; முகம் சோர்ந்து வாடிப்போய் எவ்வளவு இறங்கிப் போயிருக்கிறார்கள்' என்று உண்மையை விளக்கிப் பேசியது அவர்கள் நடுநின்ற நன்னெஞ்சப் பாங்கைக் குறிக்கின்றது; அவர்கள் உண்மைநிலை பாராட்டற்குரியது. மெல்லிய இனிய நன்மொழியாம் தமிழை எல்லோரும் ஒன்றுபட்டு வளர்க்க முன்வருவார்களா?

# மதிப்புரை

**ஸ்ரீ மணக்குள விநாயகர், ஒருபா வொருபது**

இந்நூலாசிரியர் "வித்தக"ப் பத்திராசிரியர் யாழ்ப்பாணம் தென் கோவை ச. கந்தையபிள்ளையவர்கள். இந்நூல் புதுவையின்கண் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மணக்குளவிநாயகர் திருவருள் தலைக்கொண்டு அப்பெருமான்மீது திரு. ஆசிரியரவர்களால் பாடப்பெற்று முன்னர் அவர்கள் நடத்திய 'வித்தக' இதழில் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் பன்மொழிவல்லராய்ப் பண்பாடு மிக்காராய் அன்பு அறிவு ஆண்மை முன்பு உடையராய் உள்ள சீலநிறை பெரியார். ஓமொழிப் பொருளாம் பிள்ளையார் தலைக்கீடாக இந்நூல் செய்யப்பெறினும், இதன்கண் காணப்படும் அழியாமரபின் தமிழ் வழிவந்த வாய்மைகள் பல. தெய்வவுண்மை தேற்றுபு முன்னோர் செப்பிய உருவகம் கற்பனை புனைவு முதலியவற்றால் பெறப்படும் மெய்ப்பொருள்கள் பலவும் இதன்கண் விளக்கப்பட்டுள்ளன.

வீடு பேறு என்பது யாக்கையை அருளால் தூய்மையாக்கி அதனை நிலத்தில் போகடாது அதனொடும் அருள்வெளியிலணைந்து அழியாது இன்புறுதல் என்பது இதன்கண் விளக்கப்பட்டுள்ளது. மெய்யடியார்கள் அனைவரும் அவ்வழியே சென்றனரெனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனைக் கற்று உண்மைகண்டுய்யவேண்டுவது தமிழன்பர் தனிக்கடன்.

இதன் விலை அணா நான்கு (உ௫ - சதம்). புதுச்சேரி இல. 4. அம்பலத்தாடையர் மடத்து வீதி, ரா. நாகரத்தினம் பிள்ளை அவர்களிடம் கிடைக்கும்.

**திருமுறைச் சுருக்கம்**

இதன் தொகுப்பாசிரியர் பாரத்வாஜி S. ராமஸ்வாமி ஐயரவர்கள்.

இந்நூல் கைக்கடங்கிய சிறிய அழகிய பதிப்பு. திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி முதலியவும், தேவார திருவாசகம் திருமந்திரம் முதலியவும் ஏனைத் திருமுறைகளும் ஓதிப் பயன் எய்தும் வண்ணம் அவ்வவற்றின் நின்று சில பல அரிய திருப்பாடல் பதிகங்கள் இதன்கண் தொகுக்கப்பெற்றுள்ளன. மிக முயன்று அருமைபெறத் தொகுத்துள்ளார்கள். இதன் விலை அணா மூன்று. கிடைக்கும் இடம்: திரு. S. ராமஸ்வாமி அய்யர், 119, புதுத்தெரு, சென்னை-1.

**மதம் வேண்டுமா?**

இதன் ஆசிரியர், பேராசிரியர், ஆ. முத்துசிவன் அவர்கள் ஆவர். இந்நூல் குன்றக்குடி அருள்நெறித் திருக்கூட்ட வெளியீடாகும். மேனாட்டு அறிவியல் துறைவல்லார் ஆய்வுரைகளோடு தம் நுண்மாண்

நுழைபுலச் செம்பொருள்களும் சேரயாத்தமைந்த சிறப்பு நூல். இதனை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பினும் உலகமும் உயிரும் நலமுற மதம் வேண்டும் என்பது ஐயமற விளங்கும். மதத்தின் உண்மைகள் உள்ள வாறு உணரப்படாமையால் சிலர் மறுக்கின்றனர். அத்தகையோரும் இதனை உணரின் ஐயம் அகன்று மெய்ந்நெறிகொண்டு வாழ்வர். இது போன்ற பல வெளியீடுகள் திருக்கூட்டத்தாரால் போதரத் தமிழகம் துணைபுரியுமாக.

### அறிவுக்கு உணவு

இதன் ஆசிரியர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள். நூல்வடிவிற் சிறிதெனினும் அச்சாணி அனையதாய் அருந்தமிழகத்து விருந்தமிழ்தாய்த் திகழ்கின்றது. பொருத்தமான பல வேறு தலைப்புக்களைக் கொண்டுள்ளது. தலைப்புகட்கு அமைந்த சிறந்த பொருள்கள் எளிய இனிய நடையில் உறுதியும் உணர்ச்சியும் ஊக்கமும் ஊட்டுவதாய்க் காணப்படுகின்றன. வீட்டில் வழங்கும் நாட்டுப் பழமொழிகள் பலவும் எட்டிலுள்ளவாறில்லாமல் பொருத்தமுறப் புகுக்கித் தரப்பட்டுள்ளன. பொதுவாக இந்நூல் தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ் மாந்தர்களையும் தலை நிமிர்ந்து தனிச்சிறப்போடு எல்லாத் துறைகளிலும் வாழ வழி காட்டுகிறது. கை அடக்கமான அழகிய நல்ல பதிப்பு. விலை அணா எட்டு. வெளியீடு: முருகன் நூலகம் 2-80. திருப்பள்ளித் தெரு, சென்னை - 1. மாணவர் ஆசிரியர் பெருமக்கள் அன்புகூர்ந்து வாங்கிக் கற்று வாழ்வுறுவாராக.

### பெரியார் அவர்களுக்கு நமது விடைகளும் வினாக்களும்

இந்நூல் 'அருள்நெறித் திருக்கூட்டம், குன்றக்குடி' என்னும் தொண்டகத்து வெளியீடு; விலை அணா 2. இது 7—10—1952. 'விடுதலை' யில் வெளிவந்துள்ள 'பத்தர்களுக்குப் பகுத்தறிவு வினாக்கள்' என்ற வினாக்களுக்கு விடையும், பெரியார் பால் உண்மை நிலைநாட்ட வினவிய வினாக்களும் சேர்ந்துள்ளது. விடைகளும் வினாக்களும் மேற்புல அறிஞர் அறிவியல் துறை வாயிலாக அறுதியிட்டுக் கூறிய கடவுளுண்மையை அங்கை நெல்லினென இங்கு உணர்த்துகின்றன. பகுத்தறிவு வேட்கையினர் ஒவ்வொருவரும் பயின்று உண்மை காணவேண்டிய ஒன்று. எளிமையும் தெளிவும் இனிமையும் வாய்ந்தது.

---

திருநெல்வேலித், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.